விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 66 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 03 புதன்கிழமை (19.09.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி இலவச இணைப்பு உள்ளே...

# வடக்கு, கிழக்கில் ஆளுநர்களாக சிவிலியன்களை நியமிக்க வேண்டும்

## ஜனாதிபதியைச் சந்தித்த சம்பந்தன் கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தமிழ் பேசும் சிவிலியன்களை அரசாங்க அதிபர்களாக நியமிக்குமாறு நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாகச் சிவிலியன்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

02

## மண்கும்பான் ஜும்மா பள்ளிவாசல் பெருவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணை, சாட்டி வெள்ளைக் கடற்கரை பிரதேசத்திலுள்ள மண்கும்பான் ஜும்மா பள்ளிவாசலில் 22 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற வருடாந்தப் பெருவிழாவின் நிறைவாக நேற்று இடம்பெற்ற தொழுகையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். கொடியிறக்க நிகழ்வையடுத்து துஆ பிரார்த்தனையும் நடைபெற்றது.

கடந்த பன்னிரெண்டு நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற இந்த

02

## இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் கிழக்கில் நியமனம்

### ஜனாதிபதி முன்னிலையில் நஜீப் ஏ மஜீத் நேற்று சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ. மஜீத் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சராக நஜீப் ஏ. மஜீத் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸுக்கு இரண்டு அமைச்சுப் பதவிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கிழக்கு மாகாண சபையின் ஆட்சியினை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு

02

# மு.கா.வின் ஆதரவு ஆளும் ஐ.ம.சு.மு.வுக்கு

### கிழக்கு முதல்வர் பதவி இரண்டரை வருடங்களின் பின் மு.கா.வுக்கு

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியானது சுழற்சி முறையில் வகிக்கப்படவுள்ளது. இதற்கமைய, இரண்டரை வருடங்களின் பின்னர் இப்பதவி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படும் என அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.


02

(கொழும்பு)

நீண்ட இழுபறியாக காணப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சியமைக்கவுள்ளது.

இதற்கான தமது ஆதரவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி கிழக்கு மாகாண ஆளுநரிடம் கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை அலரி மாளிகையில் நடைபெற்ற கிழக்கு மாகாண முதலமைச்சரின் சத்தியப் பிரமாணம் நிகழ்வில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம், செயலாளர் ஹசன் அலி ஆகியோர் புதிய முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் இந்த நாட்டின்

02

## வட்டு. கற்பக பிள்ளையார் இரதோற்சவம்

வட்டுக்கோட்டை வடக்கு, பிரமனாட்சி தோட்டம் அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் இன்று இரதோற்சவம் நடைபெறுகிறது. காலை 10.00 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார்.

நாளை (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். புதிதாக அமைக்கப்பட்ட 'கற்பக கணேச குண்ட' புனித தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவ நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

## சேலத்தில் தீக்குளித்த விஜய்ராஜ் மரணம்

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையை முன்வைத்து நேற்று முன்தினம் தீக்குளித்த சேலத்தைச் சேர்ந்த ஆட்டோ சாரதி விஜய்ராஜ் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது உறவினர்கள் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள் அவரது உடலை வாங்க மறுத்துள்ளன. 'முதல் தகவல் பிரதியை'

02

## தலவாக்கலை - லிந்துல வீதியில் சுரங்கப் பாதை

(நுவரெலியா)

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் தலவாக்கலை-லிந்துலை பகுதியில் 10 அடி உயரமான சுரங்கப்பாதை ஒன்று நேற்று கண்டு பிடிக்கப்பட்டது.

நுவரெலியா - ஹட்டன்

02

## நௌறுக்கு மேலும் 36 இலங்கை அகதிகள்

(மெல்போர்ன்)

புகலிடம் கோரும் 36 லங்கையர்களை நவுறு தீவுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அனுப்பியுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களை வெளிநாட்டில் தங்க வைத்து அவர்களின் விண்ணப்பத்தை பரிசீலிக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புதிய கொள்கையானது இலங்கை மற்றும் இந்தோனேஷியாவிலிருந்து படகுகள் மூலம்

02

## யாழ்ப்பாணத்தில் புதிய அமெரிக்க தூதுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான புதிய அமெரிக்கா தூதுவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச இடம்பெயர்ந்தோருக்கான நிறுவன அதிகாரிகளை

02

# பொதுமக்களின் சொத்துகளை இராணுவம் ஆக்கிரமிக்காது என்கிறார் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி

பொதுமக்களின் சொத்துக்களை இராணுவம் ஆக்கிரமிக்கவோ சுவீகரிக்கவோ மாட்டாது என்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக அதிகாரிகளிடம் யாழ் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலக அதிகாரிகள் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை நேற்றுச் சந்தித்தனர்.

"நாட்டின் மூன்றிலிரு பகுதி கரையோரப்பகுதி உட்பட நாட்டின் மூன்றிலொரு பகுதியை கைப்பற்ற முயன்ற பயங்கரவாதிகளுக்கு எதிராக போரிடுவதற்கு பெரும் எண்ணிக்கையானனோர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். யுத்தம் முடிந்துவிட்டது என்பதற்காக, பயங்கரவாதத்திற்கு எதிராக அர்ப்பணிப்புடன் போராடிய சிப்பாய்களை வீட்டுக்கு அனுப்பிவிட முடியாது. அவர்கள் நாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதியாகும்.

எனினும் நாட் டின் ஏனைய சில மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்திலுள்ள துருப்புக்களின் எண்ணிக்கை குறைவு ஆனால் அரசியல் காரணங்களுக்காக சில ஊடகங்கள் இந்த எண்ணிக்கையை மிகைப்படுத் துகின்றன" எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பற்றிய தகவல்கள், யுத்தம் மற்றும் மற்றும் புலிகளினால் ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து அழிவுகள் குறித்து மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க விளக்கியதாக, பாதுகாப்புப் படைகளின் யாழ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

நாம் பயங்கரவாதிகளுடனேயே போரிட்டோம். தமிழர்களுக்கு எதிராக போராடவில்லை. யுத்தத்தின்போது யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த துன்பங்களை நாம் கண்டோம். பயங்கரவாதத்தை வெற்றிரகமாக தோற்கடித்த பின்னர் அடிப்படைத் தேவைகளை நாம் இனம் கண்டதுடன் நலன்புரித் திட்டங்கள் பலவற்றை இராணுவம் ஆரம்பித்தது.

எல்.ரி.ரி.ஈ, முன்னாள் போராளிகளின் ஜீவனோபாய செயற்பாடுகள், ஆதரவற்ற குடும்பங்களுக்கான வீடமைப்பு, குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்கள் ஆகியன அவற்றுள் சிலவாகும்" என அவர்கூறினார்.

"சிங்களவர்களும் தமிழர்களும் பல தலைமுறைகளாக சகோதரத்துவத்துடன் வாழ்கின்றனர். ஆனால், கர்வம்கொண்ட உயர்மட்ட தமிழர்கள் சிலர் தமிழர்களுக்கான தனிநாட்டை பெறுவதற்கு தமிழ் இளைஞர்களை தூண்டினர். பெரும்பாலான தமிழ் மக்கள் இதை விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் தெய்வீகப் பேருரை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேறத்துடன் ஆரம்பமாகி நடை-பெற்று வருகிறது.

மகோற்சவ காலத்தின்போது, தினந்தோறும் மாலை 7.30 மணி முதல் தேவஸ்தான மண்டபத்தில் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் தெய்வீகப் பேருரை இடம்பெற்று வருகிறது.

இன்று (புதன்கிழமை) கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் "ஸ்ரீ விஷ்ணு அவதார மகிமை என்ற பொருளில் பேருரையாற்றுகிறார்.

## மாகாண சபைகளின் அனுமதி தேவை

'திவி நெகும' நகல் சட்டமூலத்தை சட்டமாக்கு வதற்கு மாகாண சபைகளின் அனுமதி தேவை என நீதிமன்றம் அறிவித்துள்ளதாகவும் இது தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவுள்ளதாகவும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் உச்ச நீதிமன்றம் பாராளுமன் றத்துக்கு அறிவித்து ள்ளது.

## மண்கும்பான் ...(தொடர்)

வைபவத்தின் இறுதியாக கந்தூரி (அன்னதானம்) வழங்கும் வைபவமும் நடைபெற்றது.

இப்பள்ளிவாசல் ஹிஜ்ரி 1386 தொடக்கம் கி.பி 1966 பிற்பட்ட காலப் பகுதியில் ஷெய்கு சுல்தான்அப்துல் காதீர் வொலீயுல்லாஹ் அவர்களின் விஜயத்தின் பின்னர் அடக்கம் பெற்றமையினால் இது புனித தலமான பேணப்படுகிறது.

## கிழக்கு முதல்வர்...(தொடர்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே கிழக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது எனவும் முஸ்லிம் காங்கிரஸுக்கு இரு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்

## மு.கா.வின் ஆதரவு ஆளும்...(தொடர்)

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாகவும், கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## சேலத்தில் தீக்கு...(தொடர்)

பார்க்க அனுமதிக்க வேண்டும், கைப்பற்றப்பட்ட 36 பக்கக் கடிதத்தை திருப்பிக்கொடுக்க வேண்டும்,

'அவர் கொடுத்த மரண வாக்கு மூலத்தின் அடிப்படையில் இலங்கை, இந்தியத் தலைவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாங்கள் உடலை வாங்குவோம் என்று உறவினர்கள் பிடிவாதமாக இருந்தனர்.' அத்துடன் உடலைப் பிரேதப் பரிசோதனை செய்வதற்கும் அனுமதி அளிக்க மறுத்துள்ளனர்.

விஜயராஜின் மரணத்தையடுத்து அனைத்திந்தியப் பெருமன்றம், விடியல் பெண்கள் மையம், விடுதலை சிறுத்தைகள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## இலங்கையின் முதலாவது...(தொடர்)

அமைப்பதனால் அக்கட்சிக்கு இரண்டு மாகாண அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளது.

மேலதிகமாகவுள்ள இரண்டு மாகாண அமைச்சு பதவிகளில் ஒன்று முன்னாள் மாகாண அமைச்சர் விமலவீர திசாயக்கவிற்கு வழங்கப்படுமெனத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களான எம்.மன்சூர், ஏ.எம்.ஜெமீல் ஏ.எல்.எம்.நசீர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட் ஆகிய நான்கு பேரில் இருவருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபை முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட 25 வருட காலத்தில் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் என்ற பதவியை இவர் பெறுகின்றார்

நடை பெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவைப் பெற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசற்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையிலேற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே நஜீப் ஏ மஜீத் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி வேட்பாளர் பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் வேட்பாளராக நிறுத்தபட்ட இவர் 11,726 விருப்பு வாக்குககளைப் பெற்று மாகாண சபைக்கு உறுப்பினராக தெரிவானர்.

நஜீப் ஏ மஜீத் அவர்கள் 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு அரசியலில் நேரடியாகப் பிரவேசித்தார். எனினும் அந்தத் தேர்தலில் அவர் தோல்வியடை ந்தார்.

ஆனால் 1994 ஆம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு, கிண்ணியாப் பிரதேச சபையின் தலைவராக தேர்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1994, 2000 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இதையடுத்து 2000 ஆம் ஆண்டு தபால் தந்தி, தொலைத் தொடர்பு ஆகிய துறைகளின் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டார். எனினும் 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

மீண்டும் 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானார். 2007ஆம் ஆண்டு கட்சியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக வெளியேறி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கூட்டுறவுத்துறை அமைச்சராகவும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 2010 ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்தார். 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலவாக்கலை...(தொடர்)

வீதி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பெக்கோ இயந்திரம் கொண்டு மலைப் பகுதி ஒன்றை வெட்டிய பொழுது லிந்துலை பெயார்வெல் தோட்டத்திற்கு அண்மையில் இந்த சுரங்கப்பாதை காணப்பட்டது.

இதனை பார்வையிட்ட தொல் பொருளியல் அதிகாரிகள் இந்தப் பாதை மூன்று திசைகளுக்கு பிரிந்து செல்வதாகத் தெரிவித்தனர்.

இந்த சுரங்கப் பாதை தொல் பொருளியல் பெறுமதி வாய்ந்த ஒன்றாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தொல்பொருளியல் மற்றும் புவிச் சரிதவியலாளர்களைக் கொண்டு பரிசோதனைகளை நடத்தும் வரை தற்காலிகமாக மண் போட்டு மூடப்பட்டுள்ளது.

## நௌறுக்கு மேலும்...(தொடர்)

குடியேற்றவாசிகள் வருவதை தடுக்க ஆரம்பிப்பதற்கு மேலும் காலம் செல்லும் எனவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கையர்களான 36 ஆண்கள் நேற்றுக் காலை 7.30 மணியளவில் நவுறுவை சென்றடைந்ததாக, அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பிரௌன் தெரிவித்தார். இவர்கள் கடந்த வாரம் அங்கு அனுப்பப்பட்ட 30 இலங்கையர்கள் சகிதம் கூடாரங்களில் தங்க வைக்கப்படவுள்ளனர்.

எவ்வித சம்பவங்களுமின்றி அவர்கள் இடமாற்றப்பட்டதாகவும் அவர்கள் அமைதியாக காணப்படுவதாகவும் அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் ஆளுநர்களாக...(தொடர்)

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்றுக் காலை அவசர சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் இரவு விடுத்த அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாணசபை அங்கத்தவர்களை அரசாங்கத்துடன் இணையுமாறு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாக இரா.சும்பந்தன் இச்சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் கூறினார். சம்பூர் மற்றும் வலிகாமம் மீள்குடியேற்றம் பற்றியும் ஜனாதிபதியிடம் சம்பந்தன் பேசி னார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கெடுக்கும்படியும் அதில் இந்த விடயங்கள் பற்றி ஆராய்ந்து தீர்வுக்கு வர முடியும் எனவும் பதிலளித்துப் பேசுகையில் ஜனாதிபதி கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கெடுக்க மாட்டாது என்ற நிலைப்பாட்டை ஒருபோதும் எடுக்கவில்லை எனவும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு முன் ஏற்கனவே ஒப்புக்கொண்டவற்றை செயற்படுத்த வேண்டும் எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு வந்தபின் இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்வதாகக் கூறியதை அடுத்து இரா.சம்பந்தனும் அதனை ஒப்புக் கொண்டார்.

## யாழ்ப்பாணத்தில்... (தொடர்)

நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.கோவில் வீதியில் உள்ள ஐ.ஓ.எம் தொண்டு நிறுவன அலுவலகத்திலேயே இச்சந்திப்பு நடைபெற்றது. ஐ.ஓ.எம் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளிற்கான கடன் உதவிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்காக ஐ.ஓ.எம். மேற்கொண்டு வருகின்ற வாழ்வாதார உதவிகள் அமெரிக்காவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பின் போது புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் தொழில் உபகரணங்கள் அமெரிக்காவின் புதிய தூதுவரினால் கையளிக்கப்பட்டன.

# எங்களுக்கு இந்திய குடியுரிமை தாருங்கள்



இந்திய அரசு தங்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று அகில இந்திய தமிழ் இலக்கிய அமைப்புகள் மாநாட்டில் பங்கேற்ற இலங்கை அகதிகள் கோரிக்கை விடுத்தனர்.

புது தில்லியில் கடந்த சனி, ஞாயிறு இரு தினங்கள் அகில இந்திய தமிழ் அமைப்புகள் நடத்திய இந்த மாநாட்டில் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம், காண்டியபுரம் அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கை அகதிகள் ஐக்கிய முன்னணி அமைப்பில் இருந்து அதன் தலைவர் எஸ்.ஆர். அந்தோனி, செயலர் பாலகிருஷ்ணன், பொருளாளர் பாஸ்கர் என்கிற ஏசுதாஸ், உதவிச் செயலர் பிரான்ஸிஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்ற எங்களது ஆவலைப் பூர்த்தி செய்ய சட்ட ஆலோசகர் புனித தேவகுமார் ஆலோசனை அளித்தார். அதன் பேரில் முகாமின் ஆணையரிடம் உரிய அனுமதி பெற்று இந்த மாநாட்டில் பங்கேற்றோம். வெளிநாடுகளில் வாழும் எங்களது உறவுகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்து வந்தோம். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தமிழர்களைப் பார்த்தபோது மனம் நெகிழ்ந்தது.

1983-ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தின்போது அகதிகளாக இந்தியா வந்த தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் அடைக்கலம் கொடுத்து ஆதரவுக் கரம் நீட்டிய இந்திய அரசையும், தமிழக அரசையும் எங்களால் மறக்க முடியாது.

தமிழகத்தில் உள்ள 117 முகாம்களில் சுமார் 70,000 அகதிகள் இருக்கிறோம். வெளிப்பதிவாக 50,000 அகதிகள் உள்ளனர். இவர்களில் 32,000 பேர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் மலையகத் தேயிலைத் தோட்டங்களில் இருந்தவர்கள்.

அகதிகளாக தமிழகம் வந்து கால் நூற்றாண்டுக்கும் மேலாக குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் சலுகைகள் அளித்தாலும் குடியுரிமை, வாக்குரிமை இல்லாததால் நாடற்றவர்களாக உணர்கிறோம். கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பலவற்றையும் முறைப்படி பெற முடியாதவர்களாக இருந்து வருகிறோம்.

இலங்கையில் சூழல் மாறினாலும் அங்கே செல்ல விரும்பவில்லை. காரணம், அகதிகளாக இங்கு வந்த பலரும் முதியவர்களாகிவிட்டனர். அவர்களது குழந்தைகள் வளர்ந்துவிட்டனர்.

அவர் களுக்கு இலங்கையும், அங்கிருக்கும் பழக்கம், கலாசாரம் தெரியாது.

அவர்கள் இந்தியக் கலாசாரத்துடன் தங்களை இணைத்துக் கொண்டுவிட்டனர். ஆகவே, எங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பலரும் இந்தியக் குடியுரிமை பெற விரும்புவதால் இக்கோரிக் கையை மத்திய, மாநில அரசு கள் நிறைவேற்ற வேண்டும் என்றனர்.

# படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 6 பேர் கைது



பொத்துவில், கோமாரி பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலிய செல்வதற்கு முற்பட்ட 6 பேரை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்ததாக பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்தகுமார தெரிவித்தார்.

இதன்போது, டொல்பின் ரகவான் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கோமாரி கடற்கரை பிரதேசத்தில் நேற்று அதிகாலை அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு முயற்சித்த 6 பேரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய இருவரும் அம்பாறை, மத்திய முகாம் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உருளைக்கிழங்கு, ரின் மீன்: இறக்குமதி வரி அதிகரிப்பு

ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரி 20 ரூபாவினாலும் ஒரு கிலோரின் மீனுக்கான இறக்குமதி வரி 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகரிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இவற்றின் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் வீண் விரய செலவுகளை மட்டுப்படுத்தல் உள்ளிட்ட முக்கிய நோக்கங்களுக்காக இந்த வரி அதிகரிப்பு அமுல்படுத்தப்படுகின்றது.

# கொழும்பில் சர்வதேச புத்தகக் கண்காட்சி

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி நேற்று (18) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இக்கண்காட்சியை எதிர்வரும் 26ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 9 மணிவரையில் பார்வையிட முடியும்.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி இம்முறை 14வது தடவையாக இடம்பெறுகிறது.

இந்தியா, ஜப்பான், மலேசியா, இங்கிலாந்து ஆகிய நாட்டு புத்தகங்களை இங்கு அதிகமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# குண்டை வெடிக்கவைத்து ஒருவர் தற்கொலை

மாத்தறை - திஹாகொட பிரதேசத்தில் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

காதல் பிரச்சினையின் காரணமாக இவர் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வாகனம் ஒன்றிலுள் இந்நபர் குண்டை வெடிக்கச் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அனலைதீவு, எழுவைதீவு:

# பொலிஸ் நிலையங்களை அமைத்துத் தரக் கோரிக்கை

அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் நிரந்தர பொலிஸ் நிலையம் அமைத்து தருமாறு ஊர்காவற்துறை பிரதேச செயலர் எழிலரசியினால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதேசங்களில் நடைபெறும் பிரச்சினைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார்.

அனலதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் இல்லாத காரணத்தினால் இளைஞர்களின் அடாவடித்தனங்கள் அத்துமீறிச் செல்கின்றன. மாலை நேரங்களில் நடைபெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதானால் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டி உள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸார் வரும் சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளை பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் அரிதாக காணப்படுகின்றன.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இரு பிரதேசங்களுக்கும் உடனடியாக பொலிஸ் நிலையங்கள் அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "இன்றைய கூட்ட அறிக்கையின் பிரகாரம் ஊர்காவற்துறையில் மேலும் ஒரு கூட்டத்தின் ஊடாக கலந்துரையாடப்பட்டு பொலிஸ் நிலை யங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என உறுதியளித்தார்.

# தீவக வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

## தீர்த்து வைக்க கோரிக்கை

தீவகப் பகுதியில் காணப்படும் வைத்தியசாலைகளில் வைத்தியர்களை நியமிப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்தார்.

தீவக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது, ஊர்காவற்துறை மற்றும் வேலணை, மண்டதீவு போன்ற பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்மார்கள், சிற்றூழியர்கள் உட்பட மருத்துவ ஆய்வு கூடங்கள் இல்லாமை போன்ற குறைபாடுகள் பிரதேச செயலாளர்களினால் எடுத்துரைக்கப்பட்டன.

விசேடமாக தீவக வைத்தியசாலைகளில் பிரேத பரிசோதனைக் கூடங்களை நிறுவித்தருமாறும், சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை நிரந்தரமாக நியமிக்குமாறு, கேட்டுக் கொண்டனர். பிரேத பரிசோதனைக்காக தீவகப் பகுதி மக்கள் 15,000 முதல் 20,000 ரூபா பணம் செலவிடுவதாகவும், தெரிவிக்கப்பட்டது.

அவற்றிற்கான தீர்வுகள் வடமாகாண சுகாதார பணிப்பாளரினால் எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான விண்ணப்பங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு குறைகளை நிவர்த்தி செய்வதாகவும் சுகாதார பணிப்பாளர் உறுதி அளித்தார்.

இந்நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலட்சுமி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுநடதரம் அருமைநாயகம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இன்றைய இராசி பலன் (18.09.2012)


**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 3ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : சுவாதி இரவு 11.33 வரை அதன் பின் விசாகம்
**திதி** : சதுர்த்தி பின்னிரவு 12.52 வரை.. அதன் பின் பஞ்சமி
**சுபநேரம்** : 4.33 - 6.03
**இராகுகாலம்** : 12.03 - 1.33
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : மனச்சுமை குறையும், தொழில் முன்னேற்றம், வருவாய் மத்திமம்.
**இடபம்** : பொருள்சேர்க்கை, புத்திரசுகம், பணப்புழக்கம்.
**மிதுனம்** : இல்லத்தில் மகிழ்ச்சி, வாகனசுகம், தாய்வழி உதவி.
**கடகம்** : காரியத்தடை, கோபமிகுதி, சகோதர சஞ்சலம்.
**சிங்கம்** : வாக்குச்சித்தி, பொருள்வரவு, போசன சுகம்.
**கன்னி** : மனக்குறை, தேகநலக் குறைவு, யோசனை மிகுதி.
**துலாம்** : வீண்செலவு, நிம்மதியின்மை, பிரயாணக் கஷ்டம்
**விருச்சிகம்** : பொருள் இலாபம், மூத்தோர் உதவி, மனமகிழ்ச்சி.
**தனுசு** : இடமாற்றம், முயற்சி தாமதம், தொழில் சிரமம்.
**மகரம்** : காரிய அனுகூலம், எண்ணியவை நிறைவேறல், அந்நியர் உதவி.
**கும்பம்** : வீண் யோசனை, உடல்நலக்குறைவு, தர்க்கம்பண்ணல்.
**மீனம்** : இனசனக் கொண்டாட்டம், நண்பர்கள் சேர்க்கை, பிரயாண மகிழ்ச்சி

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# காதலால் ஏற்பட்ட காயம்



அத்துறுகிறியா பொலிஸ் நிலையத்துக்கு கடந்த 27ஆம் திகதி இரவு முறைப்பாடு ஒன்று கிடைத்தது. ரணாள வீதி கபறகட எனும் முகவரியில் வசிக்கும் ஒருவரிடமிருந்தே அம் முறைப்பாடு வந்தது.

தனது வீட்டிற்கு கள்வனொருவன் வந்ததாக அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. “எனது வீட்டிற்கு இரவு 8.30 மணியளவில் கள்வனொருவன் வந்தான். நாம் சத்தம் போட்டுக் கத்தினோம். அப்பொழுது கள்வன் பாய்ந்தோடிவிட்டான். அவனின் கையடக்கத் தெலைபேசி நிலத்தில் விழுந்திருந்தது எடுத்து வைத்திருக்கின்றோம்”

இந்த முறைப்பாடு கிடைத்து சற்று நேரத்தில் ஹோமாகம வைத்தியசாலையில் இருந்து அத்துறுகிறியா பொலிஸ் நிலையத்திற்கு தகவலொன்று கிடைத்தது. இரு கால்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்” என்பதே அந்தத் தகவல். அத்துறுகிறியா பொலிஸ் நிலையப்பொறுப் பதிகாரி உட்பட்ட குழுவினர் உடனடியாக வைத்தியசாலையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

“உமது இரு கால்களிலும் துப்பாக்கிச் சூடுபட்டது எவ்வாறு?” என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வினாவினார். பயந்து நடுங்கிய இளைஞன் தட்டுத்தடுமாறி சம்பவத்தை கூறினான்”.

“நான் வேலை முடிந்து வரும்போது இருண்டு விட்டது. பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியால் வரும்போது பின்னால் வந்த யாரோ ஒருவர் எனக்குத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடி விட்டான் நான் அவனை யார் என்று காணவில்லை”.

அவரது கூற்றைப் பொலிஸார் நம்பவில்லை. திருப்தியடையவில்லை.

“அப்படி நடக்க வாய்ப்பில்லையே. உமக்குப் பின்னால் வந்து ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும்? உண்மையைச் சொல்லு என்ன நடந்தது?

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வார்த்தைகளை கேட்ட இளைஞன் மிரண்ட நிலையில் தனது நீண்ட கதையினை கூறத் தொடங்கினான்.

நான் எனது விட்டு அயலில் உள்ள பெண் ஒருவரை காதலிக்கின்றேன். நான் இன்று வேலைக்கு போகவில்லை. காதலியும் பாடசாலைக்குப் போகவில்லை. காதலியின் அம்மம்மா மட்டுமே அன்று வீட்டிலிருந்தா. நான் அவளின் காணிக்குள் வேலியால் பாய்ந்து காதலியின் அறைப்பக்கம் சென்று ஜன்னல் அருகில் சென்றேன். காதலி தனது அறைக்கதவை மூடி வைத்து விட்டு ஜன்னல் அருகில் வந்தாள். நாம் இருவரும் ஜன்னல் ஊடாக கதைத்துக் கொண்டிருந்தோம்.

அவர் 22வயது இளைஞன். அவள் 17 வயது மாணவி. இவர்களுக்கிடையில் காதல் மலர்ந்தது. இதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகும். காதலர்கள் வீதிகளிலோ, கண்டநிண்ட இடங்களிலோ நின்று பேசவில்லை. ஜன்னல் ஊடாக காதல்மொழி பேசி இருவருக்கும் நேரம் போனதே தெரியவில்லை. மாலை இரண்டு மணியளவில் காதலியிடம் இருந்து விடைபெற்று மதிய உணவிற்காக தனது வீட்டிற்கு போனார். அவளும் மதிய உணவின் பின் மீண்டும்

பக்கத்து வீட்டுப் பெண்மணி குளிர்பதற்காக இவர்களது வீட்டிற்கு வருவது வழக்கம். அன்றைய தினமும் வழமைபோலக் குளிப்பதற்காக வந்தாள். இதனிடையில் அக்கம் பக்கம் பார்த்தபடி காதலன், காதலியிடம் வந்தாள். ஜன்னலடிக்கு வந்த இளைஞனைப் பார்த்த பெண்மணி தான் குளிப்பதை மறைந்திருந்து பார்ப்பதாக நினைத்து கத்தத் தொடங்கினார். அவரின் சத்தம் கேட்ட அயலவர்கள் கிணற்றடிக்கு வந்தார்கள். நடந்தது என்ன என்று புரிந்து கொள்ளாத இளைஞன் செய்வதறியாமல் மறைவதற்கு இடம்தேடினான் இடம் கிடைக்காத நிலையில் வீட்டிற்கு அருகில் இருக்கும் மரத்தில் ஏறி காதலியின் வீட்டு கூரையில் மறைந்து கொண்டான். அதனை எவரும் காணவில்லை. இவ்வளவு கீழ்த்தரமான செயலை புரிந்த இளைஞனை தேடிய அயலவர்கள் பாய்ந்தோடி விட்டான் என நினைத்து அவர்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்றார்கள். ஆனால் காதலன் கூரையின் மேல் செய்வதறியாமல் மறைந்திருந்தான்.

இரவு நேரம் காதலியின் பெற்றோர்களும் வீட்டிற்கு வந்து விட்டார்கள். நன்றாக இருளும் வரை காத்திருந்த காதலன் மெதுவாக ஓட்டின் மேல் நடந்து கீழே இறங்க முயற்சி செய்தான். நேரம் எட்டு முப்பது. வீடு அமைதியாக இருந்தமையால் ஓட்டின் மீது நடக்கும் சத்தம் காதலியின் பெற்றோருக்குக் கேட்டது. அவர்கள் “கள்வன் கள்வன்” என்று கத்தத் தொடங்கினார்கள்.

ஓடி வாருங்கள் கள்வன் எமது வீட்டு கூரையின் மீது இருக்கிறான் என்று கத்தினார்கள். அயலவர்கள் வருமுன் பாய்ந்து மரத்தில் தாவிய இளைஞன் இறங்கி ஓடத்தொடங்கினார்.

முற்றத்தில் நின்று முகம் கழுவிக்கொண்டிருந்த இளைஞொருவருக்கும் இவர்களின் அலறல் சத்தம் கேட்டது. உடன் வீட்டு மதிலில் ஏறிப்பார்த்தான். யாரோ ஒருவர் ஓடுவதைக் கண்டார். தனது வீட்டு விறகுக்குள் மறைத்து வைத்திருக்கும் 9 மில்லி மீட்டர் கைத்துப்பாக்கி நினைவிற்கு வந்தது. உடன் சென்று அதனை எடுத்து இளைஞர் ஓடிய திசையை நோக்கி ஓடிச்சென்று இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். இளைஞன் கீழே விழுந்தான். இதனைக் கண்ட துப்பாக்கி ஏந்தியவர் எதுவும் அறியாதது போல ஏனையவர்களுடன் இணைந்து கள்வனைத் தேடத் தொடங்கினர்.

பின்னர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் நிலத்தில் வீழ்ந்திருந்த இளைஞனை திடீரெனக் கண்டு “இதோ கள்வன். யாரே துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள்” என்று கூறி நடித்தான், உடனடியாக அயலவர்கள் இவனை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றார்கள். காயப்பட்டவர் தமது அயலவன் என்பதையும் அடையாளம் கண்டு கொண்டார்கள்.

இக் கலவரத்தின் இடையில் துப்பாக்கி பிரயோகம் செய்தவர் தனக்கு வெடி கொழுத்தும் சத்தம் கேட்டதாகவும் பல தடவை கூறியுள்ளான். மறு நாள் காலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின் இளைஞொருவரை சந்தேகத்தின் பின் கைது செய்தார்கள். நிச்சயம் இவர்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்க வேண்டும் என்று அசைக்கமுடியாத சந் தேகம் பொலிஸாருக்கு இருந்தது. அவரி டம் விசாரணை மேற்கொண்ட போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவரத் தொடங்கின. இவர் பணம் வட்டிக்கு கொடுப்பவர். கை நிறையப் பணம் உள்ளவர். அவர் பொருட் களை ஈட்டுக்கு வைத்துக் கொண்டு பயம் கொடுப்பவர். இதற்கு ஒன்றரை வருடத்திற்கு முன்பு முல்லேகம என்னும் பிரதேசத்தில் வசிக்கும் பாதாளக் கோஷ்டி தலைவர் ஒருவரிடம் 9 மில்லி மீட்டர் கைத் துப்பாக்கியை ஈட்டுக்குப் பெற்று பணம் வழங்கியுள்ளார். பின் ஏதோ ஒரு சம்பவத்தில் ஈடு வைத்தவர் இறந்து விட்டமையால் கைத் துப்பாக்கி இவருக்குச் சொந்தமாகியது. சம்பவதினம் தன்னிடம் பணம் கொள்ளையடிப்பதற்காக கள்வன் வந்துள்ளார் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறியுள்ளார்.

அவரிடமிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்காக பயன்படுத்திய கைத் துப்பாக்கி மற்றும் 04 தோட்டாக்களையும் கைப்பற்றினார்கள். அவருக்கெதிராக இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பாய்ந் தோடிய இளைஞனை துப்பாக்கிப் பிரயோகம் செய்து காயப்படுத்தியமை மற்றும் சட்டவிரோதமாக துப்பாக்கியை வைத்திருந் தமையே அக் குற்றச்சாட் டுக்களாகும். அவரின் கைகளுக்கு விலங்கு மாட்டப்பட்டது.

எங்கேயோ நடந்த சம்பவத்தை என்ன என்று அறியாமல் தலையிட்ட காரணத்தினாலாகும்.

காயப்பட்ட இளைஞன் இரு கால்களிலும் துப்பாக்கிச் சூட்டினால் காயம் ஏற்பட்டது. துப்பாக்கியிலிருந்து பாய்ந்த தோட்டா இளைஞனின் ஒரு காலினை துளைத்துக்கொண்டு வெளியேறி மற்றக் காலினையும் காயப்படுத்தியுள்ளது. அத்துருகிரியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி- பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கப்பில சேனானாயக்க உட்பட குழுவினர் விசாரணையை மேற்கொண்டார்கள்.

அல்பேட் ஸ்ரீரஞ்சன் (ஸ்ரீ மாஸ்டர்)




நேற்று யாழ்ப்பாணம் ஞானம் ஹொட்டேலில் நடைபெற்ற சிகரம் கல்வி, கல்வி தொழில் வழிகாட்டி விபரக் கொத்து நூலின் வெளியீட்டு நிழவின்போது, வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ்.இராதாகிருஸ்ணன் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும், தொடர்ந்து நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# யாழில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் தீவிரமாக அமுல்

காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு தண்ட பணமாக 246,000 ரூபா நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது என பாவணையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாவணையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது 26 வர்த்தகர்களுக்கு எதிராக நீதின்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இவர்களில், 12 வர்த்தகர்கள் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 120,000 ரூபா தண்ட பணம் யாழ். நீதிமன்றத்தினாலும், 14 வர்த்தகர்கள் தலா 9,000 ரூபா வீதம் 126,000 ரூபா தண்ட பணம் பருத்தித்துறை நீதிமன்றத்தினாலும் அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை ஒத்திவைப்பு

நான்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளில் அரசாங்க மருத்துவர்கள் இன்று முதல் மேற்கொள்ளவிருந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையை ஒத்திவைப்பதற்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

சப்ரகமுவ, மத்திய, வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சுமார் 80 வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் நாளை முதல் பகிஷ்கரிப்பு மேற்கொள்வர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மருத்துவர்கள் மீதான தொந்தரவுகள் மற்றும் நிர்வாக பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றை சுகாதார அமைச்சு நியமித்ததையடுத்து தொழிற்சங்க நடவடிக்கையை ஒருவாரத்திற்கு ஒத்திவைப்பதற்கு மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# போதையில் வாகனம் செலுத்திய 37பேர் யாழ்.மாவட்டத்தில் கைது

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தில் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 37 பேரை கைது செய்துள்ளதாக யாழ்.போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் நாளொன்றுக்கு 7 முதல் 10 வரையான வாகன சாரதிகள் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நிலையில், நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்படுகின்றதெனவும் அவர் பொலிஸார் கூறினர்.

புள்ளிவிபர அடிப்படையில் மது போதையில் வாகனம் செலுத்துவர்களின் எண்ணிக்கை யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய நிலையிலிருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## ஹஜ் யாத்திரை விவகாரம்:

# அடிப்படை உரிமை மீறல் மனு நீதிமன்ற விசாரணைக்காக ஏற்பு

2012ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை ஏற்பாட்டாளர்களின் தெரிவை எதிர்த்து ஹஜ் பயண ஏற்பாட்டாளர்களில் ஒருவர் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனு விசாரிக்கத்தக்கது என உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை அறிவித்தது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. ட்ரவல்ஸ் டேற்றா ருவெர்ஸ் அன்ட் ரவல்ஸ் லிமிட்டெட் மற்றும் அதன் பொது முகாமையாளர் எம்.ஜே.ஏ.குவாஃப்டீன் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர் அப்துல் காதர் மற்றும் முஸ்லிம் கலாசார விவகார திணைக்களத்தின் பணிப்பளார் வை.எல்.எம்.நவவி உட்பட ஐவர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஹஜ் யாத்திரிகர்களுக்கான பயண சேவையை தாம் வழங்குவதை தடுத்துள்ள பிரதிவாதிகளின் நீதியில்லாத மற்றும் பாகுபாடான செயற்பாடுகள் பற்றி மனுதாரர்கள் முறையிட்டுள்ளனர்.

ஹஜ் பயண ஏற்பாட்டாளர்களை தெரிவு செய்வதற்கு வெளிப்படையான ஒரு தெரிவுத்திட்டத்தை தயாரித்து அதை வெளிப்படையாக செயற்படுத்த வேண்டும் என நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு பணிக்க வேண்டும் எனவும் குறித்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

# பசுமாட்டை திருடிச்சென்று வெட்டிய நபருக்கு நீதிமன்றத்தால் தண்டனை

பசு மாடொன்றைக் களவாடி இறைச்சிக்கு வெட்டிய ஒருவருக்கு 50,000 ரூபா தண்டத்துடன், 6 மாத சிறைத்தண்டனை வழங்கி மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தீர்ப்பளித்தார்.

இந்நபர் 50,000 ரூபா தண்டம் செலுத்தாதுவிடின் மேலும் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் நீதவான் கூறினார்.

மன்னார், சின்னக்கரிசல் கிராமத்திலுள்ள காட்டுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக பசு மாடொன்று இறைச்சிக்கு வெட்டியதாக மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தகவல் கிடைத்ததாகவும் இதனையடுத்து பொதுச் பரிசோதகர்கள் அங்கு சென்றபோது சந்தேக நபர் தப்பிச்சென்றதுடன், மாடு வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வெட்டுவதற்கு தயாராகவிருந்த மற்றுமொரு மாடும் மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் மீட்கப்பட்டது.

வயிற்றில் குட்டியுடனான பசு மாடே களவாடப்பட்டு வெட்டப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய பசு மாட்டை வெட்டிய நபர் கடந்த சனிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் பிடிபட்டிருந்தார்.

# மக்களிடையே குழப்பத்தை உருவாக்க சில சக்திகள் முயற்சி

## அமைச்சர் டக்ளஸ்

சிவில் பாதுகாப்பு குழுவில் சமூக விரோதிகளை உள்வாங்க வேண்டாம் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் நடைபெற்று முடிந்த இந்த காலப்பகுதியில் சில சக்திகள் மக்களிடையே குழப்ப நிலையை உருவாக்க திட்டம் போடுகின்றன. பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையில் இருக்கும் உறவுகளை குழப்ப சில விரோதிகள் சிவில் பாதுகாப்பு குழுவில் இணைந்து செயற்பட நினைப்பார்கள்.

அவ்வாறானவர்களை இணைப்பதற்கு சிவில் குழுவில் இருக்கும் உறுப்பினர்கள் இடம்கொடுக்கக்கூடாது. சில நேரங்களில் தாங்கள் செய்யும் செயற்திட்டங்களை குழுவில் இருந்து சாதிக்க நினைப்பார்கள். இந்த குழுவினை பயன்படுத்தி மக்களின் செயற்பாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்த நினைப்பார்கள். இவ்விடயத்தில் மக்களும், பொலிஸாரும் கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

ஒவ்வொரு சிவில் பாதுகாப்பு குழு கூட்டமும் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். அபிவிருத்தி மற்றும் மொழி அமுலாக்கம் சமநிலையில் இருந்து வருகின்ற நிலையில் சிவில் அமைப்புக்கள் சமூக அக்கறையுடன் முன்னோக்கி செயற்பட வேண்டும்.

எமது நாடு சிறப்பாகவும், ஆரோக்கியமாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்க பிரதேசங்களில் நடைபெறும் குற்றச்செயல்களை இணங்கண்டு அவற்றை தகுந்த முறையில் தீர்க்க நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# தேர்தலில் வென்றோர் விபரம் வர்த்தமானியில்

நடைபெற்று முடிந்த கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலில் வெற்றி பெற்ற அனைவருடைய பெயர் விபரங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இதற்கான பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இம் மூன்று மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற அனைவருடைய பெயர் விபரங்களும் கடந்த வியாழக்கிழமை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

# பெறுமதிமிக்க கற்கள் அகற்றப்பட்ட புராதன வாளின் பாகங்கள் மீட்பு

நுகவெல அதிகாரி என்பவரின் புராதன அலங்கார வாளை கொழும்பு நூதனசாலை அதிகாரிகள் இனங்கண்ட போதும் அது சந்தேக நபர்களினால் பகுதிகளாக கழற்றப்பட்டு, அதிலிருந்த பெறுமதிமிக்க கற்களும் அகற்றப்பட்ட நிலையில் அதன் எச்சம் மட்டுமே எஞ்சியுள்ளது என கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸார், கொழும்பு பிரதான நீதவானுக்கு அறிவித்தனர்.

கொட்டாஞ்சேனையில் கப்பம் கோரப்பட்டமை தொடர்பாக கொழும்பு குற்றப்பிரிவுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோதே இந்த விடயம் தெரியவந்ததாக அவர்கள் கூறினர்.

கைது செய்யப்பட்டவர் வழங்கிய தகவலை அடுத்து இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய வேறு சந்தேகநபர்களைக் கைது செய்ததாகவும் மற்றுமொருவரை தேடி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கெஸ்பாவ நீதவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கின் சந்தேநகபர்களை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள வழக்குடன் இணைக்கும்படி கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

இதை ஏற்றுக்கொண்ட நீதவான் றஸ்மி சிங்கப்புலி, சந்தேகநபர்களான சுஜீவ தேவப்பிரிய, நிஷாந்தி தேவப்பிரிய மற்றும் எஸ்டினா ஒஸ்ரிக் பெரேரா ஆகியோரை கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையிலுள்ள வழக்குடன் இணைத்துக் கொண்டு அவர்களை ஒக்டோபர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கட்டளையிட்டார்.

ஏனைய சந்தேகநபர்களான மகலகே அஜித்குமார, சுரங்க ஜயகாந்த மற்றும் சண்முகம் தேவர் சந்திரசேகரன் ஆகியோர் கொழும்பு குற்றப்பிவில் தடுப்புக் காவலில் உள்ளன.

தனது கட்சிக்காரர்கள், எவ்விதமான சட்டரீதியற்ற நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை எனவும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட கலைப்பொருட்கள் சந்தேகநபர் ஒருவரினால் விலைக்கு வாங்கப்பட்டவை எனவும் இவர் அங்கீகாரம் பெற்ற கலைப்பொருள் சேகரிப்பாளர் எனவும் சந்தேக நபர் சார்பில் மன்றில் ஆஜரான வழக்குரைஞர் கூறினார்.

ஒரு சந்தேகநபருக்கு வழங்கப்பட்ட அதிகாரமளிக்கும் கடிதத்தையும் அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

# கொழும்பில் வைரத்தை விழுங்கிய சீன பிரஜைக்கு தொடர்ந்து விளக்கமறியல்

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியின்போது சீனப் பிரஜையொருவரினால் விழுங்கப்பட்ட வைரக்கல் போலியானது என கொழும்பு பிரதான நீதவானிடம் கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சௌஷின் விழுங்கிய வைரமும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஏழு வைரங்களும் போலியானவை என இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை உறுதிசெய்ததாக பொலிஸார் கூறினார்.

இச்சந்தேக நபருடன் கண்காட்சிக்கு வந்தவர்களில் மூவர் இன்னும் இலங்கையில் உள்ளதாகவும் அவர்களை பொலிஸார் தேடி தேவருவதாகவும் கறுவாத்தோட்ட பொலிஸார் கூறினர்.

சந்தேக நபரை ஒக்டோபர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை

## பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடையாகக் கூடாது

கடந்த இருவாரங்களுக்குள் சர்வதேச அமைப்புகள் இரண்டின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். அத்துடன் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். பொதுவாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வரவேண்டுமென்று விரும்பிய நாடுகள் அதிகம். அதேபோல யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பிரச்சினைக்குக் காரணமான இன முறுகலுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுமே அவற்றின் நோக்கமாகவும் இருந்தது. ஆனால் யுத்தம் முடிவுற்ற பின்னர் தேசிய அரங்கிலும், சர்வதேச மட்டத்திலும் பல்வேறு பிரச்சினைகள் கிளப்பப்பட்டு வருகின்றன.

றொபேர்ட் ஓ பிளேக்கின் விஜயத்திற்குப் புறம்பாக பொதுநலவாயப் பாராளுமன்ற அமைப்பின் பிரதிநிதிகளும் இலங்கைக்கு விஜயம் செய்தார்கள். அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்தது. பொதுநலவாயப் பாராளுமன்ற பிரதிநிதிகளும், ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வடபகுதிக்கும் விஜயம் செய்துள்ளார்கள்.

இவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்துப் பேசியுள்ளனர்.அரசாங்க தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. இலங்கை அரசாங்கம் முன்வைத்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நிறைவேற்றுமாறு அமெரிக்க பிரேரணை வலியுறுத்தியது. அத்துடன் குறிப்பாக யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் ,இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நாவிடம் இருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெறுமாறும் அத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தியதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் இன்னும் ஆறு மாதங்களுக்குள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்.

மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் றொபேர்ட் ஓ. பிளேக் வலியுறுத்தியிருந்தார். அத்துடன் இலங்கையின் வட பகுதியில் இராணுவப் பரம்பலை குறைக்க வேண்டும் என்றும் பிளேக் வலியுறுத்தியுள்ளார். ஐ.நா. மனித உரிமை பேரவை பிரதிநிதிகளாயினும் சரி, பொதுநலவாயப் பாராளுமன்ற அமைப்பின் பிரதிநிதிகளாயினும் சரி பிளேக்கின் நிலைப்பாட்டோடு ஒன்றித்து நிற்பவர்கள்தான்.

யுத்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் எதுவுமே நடைபெறவில்லை என்று அடித்துக் கூற முடியாது. ஆனால் யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரிப்பதற்காக அரசாங்கம் இராணுவ நீதிமன்றங்களை அமைத்துள்ளது. ஆட்கடத்தல்கள், ஆட்கள் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான பொறுப்பு பாதுகாப்புப் படையினரிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகள்தான்.

அரசாங்கம் மனித உரிமைகளை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை திட்டம் ஒன்றினையும் முன்வைத்துள்ளது. யுத்த காலத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துதான் இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. யுத்தம் நடைபெறும் அனைத்து நாடுகளிலும் இதுவே நிலைமையாகத்தான் இருந்திருக்கும். அதற்காக சட்டமும் ஒழுங்கும் சீர்குலைய வேண்டுமென்றோ, மனித உரிமை மீறல்கள் இடம்பெற வேண்டுமென்றோ கூறமுடியாது.

சகல மாகாண சபைகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அரசாங்க ஆளும் கட்சிகளுக்குண்டு. நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் யுத்த காலத்தில் இலங்கை சந்தித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முன்முயற்சிகளை அரசாங்கமே எடுக்க வேண்டும். யுத்தத்தின் வடுக்களை மூவின மக்களுமே சுமந்துகொண்டாலும், மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மை இனம் என வகைப் படுத்தப்பட்ட தமிழ் மக்கள்தான். பெருமளவுக்கு இடம்பெயர்ந்தவர்கள் தமிழ் மக்கள். பெருமளவு உயிர்களைக் காவு கொடுத்தவர்கள் தமிழ் மக்கள். பெருமளவுக்கு இரத்த உறவுகளை பறிகொடுத்து விட்டு இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்வதும் தமிழ் மக்கள்தான். இன முரண்பாடுகளை கையாள்வதற்கு அமைதி முறையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டதன் ஒரு விளைவாகவே தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஆயுதமேந்த உந்தித் தள்ளப்பட்டார்கள். கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, நேற்று நடந்த துயரங்கள் இன்றோ, நாளையோ இடம்பெறாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்திடம் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கும் உண்டு.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# கிழக்கின் களநிலை, அடுத்து என்ன?

இலங்கை போன்ற நாடுகளில் தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதில் இரண்டு காரணிகள் தான் முக்கிய பங்கு வகிக்கின்றன. வெற்றித் தோற்றப்பாடும் இன உணர்வுமே அந்த இரண்டு காரணிகளாகும்.

தமது கொள்கைகள், சுலோகங்கள், வாக்குறுதிகள் ஆகியவற்றால் மக்களை கவரலாம் அக் கொள்கைகள், சுலோகங்கள் வாக்குறுதிகள் ஆகியவற்றை வாக்குகளாக மாற்றலாம் என்று அரசியல் கட்சிகள் நினைக்கின்றன. ஆனால் அவை தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதில் பெரும் பங்களிப்பை வழங்குவதில்லை. அவற்றின் பங்களிப்பு மிகச் சிறியதாகும்.

நாட்டில் ஊழல் மோசடி மலிந்துவிட்டது என்றும் வானலாவ உயரும் விலைவாசிக்கு அதுவே காரணம் என்றும் எதிர்க் கட்சிகள் கூறுகின்றன. மறுபுறத்தில் போர் முடிந்த பின் மக்களுக்கு சலுகை வழங்குவதாக கூறிய அரசாங்கம் போர் முடிவடைந்து மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் மக்களுக்கு சலுகை வழங்கவில்லை என்றும் எதிர்க் கட்சிகள் குறை கூறுகின்றன.

ஆனால், மக்கள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை வெறுப்பதாக தெரியவில்லை. இன்னமும் எந்தத் தேர்தல் நடந்தாலும் அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியே அமோக வெற்றி பெற்று வருகிறது. எனவே தேர்தல்களின் போது தேர்தல் விஞ்ஞாபனங்களில் வரும் கொள்கைகளோ அல்லது அரசியல் கட்சிகளின் நடத்தையோ முக்கியமானதாக தெரியவில்லை.

அவ்வாறாயின் மக்கள் எதற்காக ஐ.ம.சு.கூட்டணிக்கு வாக்களிக்கிறார்கள்? மற்றொரு கட்சி நாளை பதவிக்கு வரக்கூடிய நிலைமை இருந்தால் மக்கள் இவ்வாறு ஐ.ம.சு.கூவுக்கு அலை அலையாக வாக்களிப்பார்களா? தாம் வாக்களிக்கும் கட்சி பதவிக்கு வர வேண்டும் என்றே மக்கள் நினைக்கிறார்கள். அல்லது கொள்கைகள் எவையாக இருந்தாலும் பதவிக்கு வரக் கூடிய கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். சுருக்கமாக கூறின் வெற்றி பெறும் அணியில் தாமும் இருக்க வேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள்.

இந்த வெற்றித் தோற்றப்பாடு இப்போதைக்கு ஐ.ம.சு.கூட்டமைப்பிடமே காணக்கூடியதாக இருக்கிறது. எனவே தான் அரசாங்கத்தின் தலைவர்கள் எவ்வளவுதான் வாக்குறுதிகளை மீறினாலும் மக்கள் ஐ.ம.சு.கூட்டமைப்புக்கே வாக்களிக்கறார்கள். ஐ.தே.க.விடமிருந்து அந்த தோற்றப்பாடு தென்படுவதில்லை. எனவே அக்கட்சி தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியடைந்து வருகிறது.

வடக்கு கிழக்கு பகுதிகளை பொறுத்தவரை இன உணர்வே தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் பிரதான சக்தியாக இருக்கிறது. இதனை விளங்கிக் கொள்ளாத சிலர் மக்கள் இன ரீதியாக பிரிந்து வாக்களித்துள்ளதாக ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்னரும் கூறுகிறார்கள். இம்முறையும் கிழக்கில் தமிழர்கள் செறிவாக வாழும் தொகுதிகளில் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பெரும்பாலான மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித் துள்ளனர்.

ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்துள்ள போதிலும் அவற்றை அக் கூட்டமைப்போடு இணைந்து போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிக்கு அளித்த வாக்குகளாகவே கருத வேண்டியிருக்கிறது.


எதிர்பார்த்ததைப் போலவே கிழக்கு மாகாணத்தில் இன வாரியான முக்கோண போட்டியே நடைபெற்றது. அதேபோல் போட்டியிட்ட மூன்று பிரதான கட்சிகளில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதுவும் எதிர்ப்பார்த்த முடிவுதான். எனினும் தேர்தலின் பின்னர் இந்த முடிவு மு.கா.வின் பெறுமதியை அதிகரித்துள்ளது. அதன் கைகளை பலப்படுத்தியது.

கிழக்கு மாகாண நிர்வாகத்தை நிர்ணயிக்கப் போவது தாமே என மு.கா. தேர்தல் காலத்திலும் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னரும் கூறியது. ஐ.ம.சு.கூவும் த.தே.கூவும் சேர்ந்து ஆட்சி அமைக்க மாட்டா என்ற அடிப்படையில் பார்க்கும் போது அது உண்மை தான். ஆனால் ஐ.ம.சு.கூவுக்கும் த.தே.கூவுக்கும் இவ்வாறே கூற முடியும். ஏனெனில் இந்த மூன்று அணிகளில் எந்த இரண்டு சேர்ந்தாலும் கிழக்கில் ஆட்சி அமைக்க முடியும். ஆனால் இப்போது எதிர்பார்த்ததைப் போன்று அரசாங்கத்துடன் இணைந்து மு.கா. ஆட்சியமைத்துள்ளது.

கிழக்கு மாகாண சபைக்காக தனித்து போட்டியிட்ட போதிலும் தேர்தலின் பின்னர் தமது கட்சி ஐ.ம.சு.கூவுடன் கூட்டாட்சி அமைக்கக்கூடும் என மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் வேட்பு மனு தாக்கல் செய்த உடன் கூறியிருந்தார். ஆயினும் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஆளும் கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதா அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பதா என்பதைப் பற்றி தீவிரமாக சிந்தித்தே முடிவு எடுக்க வேண்டியுள்ளது என அவர் கூறியிருந்தார்.

ஐ.ம.சு.கூவுடன் கூட்டாட்சி அமைப்பதாக மு.கா.தலைவர் முன்னர் கூறிய போதிலும் தேர்தல் காலத்தில் இரு சாராருக்கும் இடையிலான உறவு ஓரளவு பாதிக்கப்பட்டது.

மு.கா. இனவாதத்தை தூண்டுவதாக ஆளும் கட்சியினர் குற்றஞ்சாட்டினர். சிலர் இனவாதத்தை தூண்டி தேர்தலில் வெற்றி பெற முயற்சிப்பதாக ஜனாதிபதியும் கூட கிழக்கு மாகாண தேர்தல் பிரசாரத்தின் போது கூறினார்.



மு.கா. ஆதரவாளர்களும் அமைச்சர் அதாவுல்லாவின் தலைமையிலான தேசிய காங்கிரஸின் ஆதரவாளர்களும் கடுமையாக மோதிக் கொண்டனர்.

இந்த நிலையில் தேர்தல் முடிவுகள் வெளியானதால் மு.கா. தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சி அமைக்குமோ என்றும் சிலர் சிந்திக்க காரணம் இருந்தது. மறுபுறத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவருக்கு வழங்கத் தயார் என்று கூறிய த.தே.கூ, தேர்தல் காலத்திலும் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னரும் ஆட்சி அமைக்க வருமாறு மு.கா.வை அழைத்த வண்ணமிருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து மு.கா. ஆட்சி அமைத்தால் அது 2001 பொதுத் தேர்தலை தவிர 1994ஆம் முதல் ஐ.ம.சு.கூ. அடைந்த மிகப் பெரும் பின்னடைவாக அமையும். சிலவேளை 17 ஆண்டு கால ஐ.தே.க. ஆட்சியின் சரிவு 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற தென் மாகாண சபை தேர்தலில் அக் கட்சி அடைந்த தோல்வியோடு அரம்பித்ததைப் போல் ஐ.ம.சு.கூ கிழக்கு மாகாண சபையை இழந்தால் அது ஐ.ம.சு.கூட்டமைப்பின் சரிவின் ஆரம்பமாகவும் அமையலாம்.

மு.கா. தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சி அமைத்தால் மு.கா. மத்திய அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வைத்திருப்பதும் சிக்கலான் விடயமாகிவிடும். அதனால் மு.கா. தலைவர் அரசாங்கத்தில் இருந்து விலகினால் அரசாங்கம் உடனடியாக அவருக்கு வழங்கியிருக்கும் பாதுகாப்பை வாபஸ் பெறும். இவையெல்லாவற்றையும் கவனத்திலெடுத்தே செயற்பட்டுள்ளது.

ஒருபுறம் ஆதரவாளர்களின் மனப்பொக்கு, மறுபுறம் கட்சி உடையும் அபாயம். எனவே எந்த முடிவை எடுத்தாலும் மு.கா. அதனை பெரும் நெருக்கடிக்குள் தான் எடுக்க வேண்டியிருந்தது. இப்போது பிரச்சினை தீர்ந்துவிட்டது.

# கலைஞர்கள் வருகையை எதிர்க்கும் தமிழகத்திலிருந்து வர்த்தக சம்மேளனக் குழு இலங்கைக்கு வருகிறது

தமிழ்நாட்டின் வர்த்தக சம்மேளனத்தின் குழு ஒன்று இந்த வாரம் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையர்கள் தமிழகத்திற்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த எச்சரிக்கை விடுத்திருந்தது.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேச் வார்த்தை நடத்தும் பொருட்டு இந்த குழு இலங்கை வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு செல்லும் சிங்கள தலைவர்கள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள், யாத்திரீகர்கள் மீது தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனையடுத்தே இலங்கை அரசு பயண எச்சரிக்கை ஒன்றை இலங்கையர்களுக்கு விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் கலைஞர்களையும் தமிழகத்தின் தீவிர தமிழ் இன உணர்வாளர்கள் தடுத்து வருகின்றனர்.

எனினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

வர்த்தகக் குழு ஒன்றின் இந்த வருகையின் மூலம் இந்தியாவுக்கும், குறிப்பாக தமிழகத்துக்கு இலங்கைக்கும் இடையிலான வர்த்தக தொடர்பு களை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்று இலங்கை வர்த் தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

25 பேர் கொண்ட இந்த குழு இலங்கையில் பல்வேறு வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பசுபிக் தீவுகளில் இலங்கையருக்கு மற்றுமொரு முகாம்!

இலங்கை அகதிகளை தடுத்து வைப்பதற்கான பி.என்.ஜீ.மனாஸ் தீவில் புதிய முகாம் ஒன்றை அமைக்க ஒஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே நஃவுரு தீவில் ஆயிரத்து 200 பேர் தங்கக்கூடிய முகாம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மேலும் 800 பேரை தங்க வைக்கக்கூடிய முகாம் ஒன்றை இந்த தீவில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவித்துள்ளார். இந்த புதிய முகாம் அமைக் கும் பணிகளுக்கு, முன்னர் நஃவுரு தீவிற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ள அகதிகளே பயன்படுத்தப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முகமது நபி(ஸல்) அவர்களை சித்திரிக்கும் திரைப்படத்திற்கு அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹர்த்தால்!

அமெரிக்காவில் முகமது நபி(ஸல்) அவர்களை சித்தரிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனைக் கண்டித்து இன்று அக்கரைப்பற்று பிரதேசத்தில் கர்த்தாலும் கண்டனப் பேரணியும் இடம் பெற்றது.

அக்கரைப்பற்றினை தளமாகக் கொண்ட முஸ்லிம் இளைஞர்கள் அமைப்பு அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், வர்த்தகர்களின் சங்கம் ஆகியன அழைப்பு விடுத்திருந்தன. மேற்படி ஹர்த்தாலையொட்டி இப்பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பிரதேசத்தின் கடைகள் வங்கிகள், பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் அரச அலுவலகங்கள் யாவும் செயலிழந்துள்ளதுடன் பயணிகள் போக்குவரத்துகள் எதுவும் இன்றி பஸ் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

அத்துடன் அவ்வார்ப்பாட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் கொடும்பாவியை எரித்ததுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# இந்தியா - இலங்கை பகைமையை வெளிக்காட்டும் களமாக இலங்கை குறுகிப்போகாது

**- பிரசாத் காரியவசம்!**

சீனா மற்றும் இலங்கைக்கு இடையில் இராணுவ உறவுகள் வளர்வதையிட்டு புதுடில்லி விசனமடைந்துள்ள வேளையில், இவ்வுறவானது சீனாவுக்கு சாதகமானது இந்தியாவுக்கு பாதகமானது என்றோ, அல்லது இந்தியாவுக்கு சாதகமானது சீனாவுக்கு பாதகமானது என்றோ எடுத்துக்கொள்ள தேவையில்லை என இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் கூறியுள்ளார்.

வேகமாக வளர்ச்சிப்பெற்றுவரும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பகைமையை வெளிக்காட்டுவதற்கான களமாக இலங்கை குறுகிப்போகாது என அவர் கூறினார்.

எமது நாட்டையும் சூழவுள்ள கடலையும் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு எதிராக பயன்படுத்த நாம் அனுமதிக்க மாட்டோம்" எனவும் அவர் கூறினார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லியின் இந்திய விஜயத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மரபு சாராத பாதுகாப்பு அடங்கலாக விரிவாக்குவது தொடர்பில் தமது விருப்பத்தை இரு நாடுகளும் வெளிப்படுத்தியுள்ளதை பற்றிய ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் காரியவசம் இவ்வாறு கூறினார்.

இந்த விஜயத்துக்கு முன், வடக்கு கிழக்கில் உள்ள இலக்கை இராணுவத்தின் முகாம்களிலுள்ள வசதிகளை அதிகரிப்பதற்காக 100 மில்லியன் டொலரையும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திட்டத்தில் இரண்டாம் கட்டத்துக்காக 500 மில்லியன் டொலரையும் இலங்கைக்கு வழங்குவது உட்பட பல உதவிகளை சீனா அறிவித்தது.

யுத்தம் முடிந்த பின்னரும் இலங்கையின் சீனாவுடனான இராணுவ, பொருளாதார, உறவுகள் வளர்ச்சியடைவதையிட்டு இந்தியாவின் பாதுகாப்பு தந்திரோபாய சமுதாயம் வெளிப்படுத்திய விசனங்களை இலங்கை தூதுவர் நிராகரித்துள்ளார்.

நாம் விரைந்து வளர்ந்துவரும் பொருளாதாரங்களான இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கும் வர்த்தக வாய்ப்புகளை உச்ச அளவில் பயன்படுத்த விரும்புகின்றோம்" என காரியவசம் கூறினார்.

இந்தியாவின் விசனத்தை எதிர்பார்த்தே, ஜெனரல் லியாங் குவாவல் தனது இலங்கை விஜயத்தின் போது இலங்கையுடனான சீன உறவுகள் வேறு எந்தவொரு நாட்டையும் குறிவைப்பவை அல்ல என கூறினார்.

நாம் பண்டடைக்காலத்தில் எவ்வாறு இந்து சமுத்திரத்தில் வியாபார மையமாக இருந்தோமோ அவ்வாறே இப்போதும் இருக்க விரும்புகின்றோம்.

இந்த அணுகு முறையில் இலாபம் பெறும் முதலாவது நாடாக இந்தியா இருக்கும்" என அவர் கூறினார்.

# இலங்கை - சீனா 10 க்கும் மேற்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீன மக்கள் காங்கிரஸின் தலைவர் வூ பங்குவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான பயனுள்ள 10ற்கும் மேற்பட்ட முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் நிபுணத்துவ ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இரண்டாம் கட்டத் திட்டங்களுக்கு கடன் பெற்றுக்கொள்வதற்கான சில ஒப்பந்தங்கள், இலங்கைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கான் இயந்திரம் வழங்குவது தொடர்பான ஒப்பந்தம், ஐந்து வருடங்களுக்கு நிதி ஒத்துழைப்புத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம், கொழும்பு தாமரை கோபுரத் திட்டத்துக்கான ஒப்பந்தம், இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவுக்கான நிதியினை வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட பல ஒப்பந்தங்கள் இங்கு கைச்சாத்திடப்பட்டன. பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதில் சீன அரசாங்கம் வழங்கிய பூரண ஒத்துழைப்புக்கு இதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# கடற் கண்ணிகளை சமாளிக்க, முப்பது நாடுகளின் யுத்தக் கப்பல்கள் கூட்டுப் பயிற்சி

கடலுக்கடியில் புதைக்கப்படும் கண்ணிவெடிகள் ஏற்படுத்தக்கூடிய ஆபத்தை எப்படி சமாளிப்பது என்று அமெரிக்கா தலைமையில் முப்பது நாடுகளைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் பாரசீக வளைகுடாவில் பஹ்ரைனை ஒட்டிய கடல் பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

கடலுக்கடியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டால் அதனை எப்படிக் கண்டறிவது, என்பது அகற்றுவது, மற்றவர்களை உஷார்படுத்துவது என்றெல்லாம் கற்றுக்கொண்டு பயிற்சி செய்து பார்ப்பது இந்த நடவடிக்கையின் நோக்கம்.

இந்தப் பயிற்சி நடவடிக்கை ஈரான் பற்றி எவ்விதத்திலும் பேசவில்லை என்றாலும், வளைகுடாப் பகுதியில் கடலுக்கடியில் கண்ணிவெடிகளைப் புதைக்க ஈரான் முயன்றால் அது சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு முக்கிய அச்சுறுத்தலாக அமையும் என்ற நோக்கில்தான் இந்த பயிற்சி நடக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இஸ்ரேலோ அமெரிக்காவோ தங்களைத் தாக்கினால் கடலுக்கடியில் கண்ணிவெடிகளை வைப்போம் என ஈரான் எச்சரித்திருந்தது. ஆகவே ஈரான் அந்தப் பாதையில் செல்லக்கூடாது என்று எச் சரிப்பதற்கான ஒரு முயற்சியாக இந்த கூட்டுப் பயிற்சியைக் கருத இடமுண்டு.

இதேநேரம், அமெரிக்காவின் மூன்று விமான தாங்கி யுத்தக் கப்பல்கள் வளைகுடாப் பகுதிக்கு சென்று கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# பாகிஸ்தான் அணு ஏவுகணை சோதனை

700 கி.மீட்டர் தூரம் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கக் கூடிய திறன் கொண்ட ஹாப்ட்-7 என்ற ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று வெற்றிகரமாக சோதனை நடத்தியது. ஹாப்ட்-7 என்கிற பாபர் ஏவுகணை 700 கி.மீட்டர் தூரம் வரை அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கக்கூடிய திறன் கொண்டது. மிகவும் துல்லியமாக நிலம் மற்றும் கடல் பகுதியில் பறந்து சென்று தாக்கும் வல்லமை கொண்டது. இந்த ஏவுகணை சோதனை பாகிஸ்தானின் ஸ்திரத்தை பாதுகாக்கவும், பலப்படுத்தவும் உதவும் என அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த சோதனையை மேற்கொண்ட விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் குழுவை பாகிஸ்தான் அதிபர், பிரதமர் உள்ளிட்டோர் பாராட்டியுள்ளனர்.

# இக்கால இளைஞர்களுக்கு மூன்றாம் நிலைக் கல்வி அவசியமானது

**- பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை**

"இப்போது பலவகையான கற்கை நெறிகளை அறிமுகம் செய்திருக்கின்றார்கள்.

அந்தவகையில் அறிவுசார் பொருளாதார கட்டமைப்புக்குள் வாழும் இளைஞர்களுக்கு மூன் றாம் நிலைக் கல்வி அவசிமானது. கடந்த காலங்களைப் போல ஆரம்ப, இடைநிலைக் கல்வியுடன் படிப்பை நிறுத்தி தொழில் துறைகளுக்குச் செல்லும் நிலை இன்று மாறிவிட்டது. நமது நாட்டில் அல்லது வெளிநாடுகளில் படிக்கலாம்.

இவர்களுக்கெல்லாம் சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி பெரிதும் துணையாக அமைகின்றது என்று சொல்லலாம்". இவ்வாறு சிகரம் கல்வி வழிகாட்டி சேவை நிறுவனத்தினரின் நூல் வெளி யீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப் பாணம் ஞானம்ஸ் ஹொட்டேலில் நிறுவனத்தின் பணிப் பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இவர் தனது தலைமையுரையின்போது, "இன்றைய மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழிகாட்டும் முயற்சியாகவே மலேசியா விலுள்ள சர்வதேசக் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இப் பணியை செய்துவருகின்றோம்.

இலங்கையிலேயே தமிழ் மொழியிலான முதலாவது கல்வி தொழில் வழிகாட்டி விபரக் கொத்தாக இந்நூல் அமைந்துள்ளதை சிறப்பா கக் குறிப்பிடலாம். கல்வி தீபத்தை ஏற்றிவைத்து மாணவர்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் முயற்சியா கவே இது அமைகிறது. இது விடயத்தில் பிள்ளைகளை ஆற்றுப்படுத்துகின்ற பொறுப்பு பெற்றோர்களிட மும் இருக்கிறது" என்றார்.

இந்த வைபவத்தில் கலந்து கொண்ட பேராசிரியர் மா. சின்னத்தம்பி பேசும்போது "தொழில் சார்ந்த ஆற்றலை வழங்குகின்ற மற்றும் உயர் தொழிலுக்கு மாணவர்களை நகர்த்தக்கூடிய நிறுவனங்கள் பற்றிய தகவல்களை இந்த விபரத்திரட்டு மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

பாடசாலை நூலகங்கள் தோறும் வைக்கப்படவேண்டும்" என்றார்.

விபரக்கொத்து நூலின் முதற் பிரதியை வடமாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ். இராதாகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.


திருமதி சுதாஜினி றுஷாங்கன் நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

வெளியீட்டு வைபவத்தின் பின்னர் மதியபோசனமும், இதனைத் தொடர்ந்து கருத்தரங்கும் கல்விக் கண்காட்சியும் இடம்பெற்றது.

மலேசியாவின் பிரபலமான சிகி பல்கலைக்கழகம், இன்ரி சர்வதேச பல்கலைக்கழகம், மஹ்சா பல் கலைக்கழக கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

இதன்போது வீடியோ மூல மான காட்சிகளுடன், வழிகாட்டி நூல்கள் மற்றும் பயிற்சி துணைநூல்கள் என் பனவும் காட்சிப்படுத்தப்பட்டு தேவையான விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. பாடசாலை அதிபர், ஆசிரியர், உயர்கல்வி மாணவர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (க)

# யுத்தத்திற்கு பின்னரான வளர்ச்சியில் இலங்கையில் விவசாய புரட்சி ஆரம்பமாகியுள்ளது




கடந்த 30 ஆண்டு கால பயங்கரவாத யுத்தத்தினால் சீர்குலைந்து போயிருக்கும் இலங்கையின் இயற்கை வளங்களான பாரிய வாவிகளையும் நீர்த்தேக்கங்களையும் கால் வாய்களையும் மீண்டும் புனரமைத்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் நாலா பக்கங்களிலும் விவசாயத் துறையில் மீண்டும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி எங்கள் நாட்டின் பண்டைய பாரம்பரியத்திற்கு அமைய ஆசியாவின் நெற்களஞ்சியம் என்ற பெருமையை இலங்கைக்கு மீண்டும் பெற்றுத்தருவதற்கு நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபாடி டி சில்வா இப்போது துரிதகதியில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை எண்ணக்கருவை சரியான முறையில் நிறைவேற்றும் முகமாக இவ்வமைச்சு 2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் 24.263 மில்லியன் ரூபாவை நேர்த்தியான முறையில் செலவிட்டு வாவிகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்களை மட்டுமன்றி, பாரிய அணைகளையும் திருத்தும் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. 2010 ஆம் ஆண்டில் இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்காக 15.325 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஒம ஓயாவை திசை திருப்பும் அபிவிருத்தி திட்டத்திற்காக 5.450 மில்லியன் ரூபாவும், அணை- களை பாதுகாத்தல் மற்றும் நீர் வளங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதற்காக 2.755 மில்லியன் ரூபாவும், மகாவலி கி புனரமைப்பு திட்டத்திற்காக 500 மில்லியன் ரூபாவும், தெதுறு ஓயா அபிவிருத்தி திட்டத்திற்காக 2.170 மில்லியன் ரூபாவும், ரம்பக் கன் ஓயா திட்டத்திற்காக 800 மில்லியன் ரூபாவும், அனுராதபுரம் குளங்கள், நீர்த்தேக்கங்களை புனரமைப்பு திட்டத்திற்காக 1.100 மில்லியன் ரூபாவும் அடுத்த ஆண்டில் செலவிடப்படும்.

இவற்றை விட வடக்கில் உள்ள பாரிய விஸ்வமடுகுளம், மன்னார் பிரதேசத்தில் உள்ள கட்டுக்கரைக் குளம் உட்பட வட மாகாணத்தில் இருக்கும் சகல குளங்களையும், நீர்த்தேக்கங்களையும் புனரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் இப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



கடந்த காலத்தில் நெற் செய்கைக்கு தேவையான நீரை இந்த நீர்த் தேக்கங்கள் ஏரிகள் மூலம் பெறுவதற்கு இருந்த வாய்ப்புக்கள் பயங்கரவாத செயற்பாடுகள் உச்ச கட்டத்தில் இருந்த காரணத்தினால் சீர்குலைந்திருந்தன. வடக்கிலும், கிழக்கிலும் நெற்காணிகளில் பயங்கரவாதிகளினால் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததனால் அப்பிரதேசங்களில் பல்லாண்டு காலம் நெற்செய்கை கைவிடப்பட்ட நிலையில் இருந்தது.

இப்போது இராணுவத்தினரும், அரச சார்பற்ற சர்வதேச அமைப்புக்களும் சுமார் 80 சதவீதத்திற்கும் கூடுதலான கண்ணிவெடிகள் பாதுகாப்பாக அகற்றப்பட்டு அங்கு மீண்டும் விவசாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த நெற்காணிகளுக்கு தேவையான பாசன வசதி களை அரசாங்கம் இப்போது வழங்குவதற்கான வசதிகளை துரிதப்படுத்திய வண்ணம் இருப்பது இந்நாட்டின் விவசாய பெருமக்களை பெரும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

அரசாங்கம் இப்போது நடைமுறைப்படுத்தி வரும் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதி முக்கியத்துவம் பெறுகின்ற காரணத்தினால் அங்கு நீர்ப்பாசன வசதி- களை செய்து கொடுப்பதுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஆகியோரின் தலைமையில் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை பெற்று கொடுப்பதுடன், உழவு இயந்திரங்கள் நீர்ப்பாசனத்திற்கு தேவையான உரப்பசளை, விதை நெல் போன்றவற்றை சலுகை அடிப்படையில் வழங்கிக் கொடுப்பதற்காக விசேட வங்கி கடன் திட்டங்களையும் அவர்களுக்காக இப்போதுபெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இவ்விதம் நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்து விவசாயத் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக உலக வங்கியும், சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனமும் இலங்கை அரசாங்கத்திற்கு 7 பில்லியன் ரூபாவை வட்டியில்லா கடனாக ஏற்கனவே வழங்கியிருக்கிறது. இதன் மூலம் நாட்டில் உள்ள 39 பாரிய நீர்த்தேக்கங்களையும், அணைகளையும் புனரமைப்பு செய்யும் பணி இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பராக்கிராம சமுத்திரம், இன்கினிமிட்டிய நீர்த்தேக்கம் ஆகியவற்றை புனரமைக்கும் வேலைகள் 1.8 பில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டங்கள் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் வெற்றிகரமான முறையில் நிறைவேற்றப்பட்டவுடன் எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் உள்ளூரில் உற்பத்தியாகும்.

அரிசியை நியாய விலைக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் பண்டைய காலத்தில் இருந்ததைப் போன்று நாம் மீண்டும் வெளி நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்து எங்கள் தேசிய வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்கும் ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகுவது திண்ணம்.



(15) நிரல் I இல் தேசவிடுதலைக்காய் புரட்சிகள் இடம்பெற்ற ஆண்டுகளும், நிரல் II இல் அவ் ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சியின் மூலம் விடுதலை பெற்ற நாடுகளும் தரப்பட்டுள்ளன. நிரல் I இல் உள்ள ஆண்டுகளுடன் நிரல் II இல் உள்ள நாடுகளைப் பொருத்தினால் கிடைக்கும் சரியான விடை?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. 1776 | A.சீனா |
| 2. 1789 | B.பிரான்ஸ் |
| 3. 1917 | C.ரஷ்யா |
| 4. 1949 | D.அமெரிக்கா |
| | E.பிரித்தானியா |

1.E,B,C,A 2. D,E,C,A
3.D,B,C,A 4.A,B,C,D

(16) A- "அரசு என்பது நானே நான் கருதுவதெல்லாம் சட்டமே"
B- "நூறு எலிகளால் ஆளப்படுவதை விட ஒரு சிங்கத்தால் ஆளப்படுவது மேல்"
C- மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் எனினும் அடிமைச் சங்கிலியால் கட்டப்பட்டுக் கிடக்கிறான்.
மேலே A,B,C ஆகிய கூற்றுக்களுடன் தொடர்புடையவர்களை முறையே குறிப்பிடும் விடைத்தொகுதி?
1. ரூசோ, வோல்ரயர், 14ஆம் லூயி 2. வோல்ரயர், ரூசோ, 14ஆம் லூயி
3. 14ஆம் லூயி, வோல்ரயர், ரூசோ 4. 14ஆம் லூயி, ரூசோ, வோல்ரயர்

(17) இலங்கை வரலாற்றின் முதலாவது பௌத்த மன்னனையும் முதலாவது கத்தோலிக்க மன்னனையும் குறிப்பிடும் விடை?
1. பண்டுகாபயன் - தீஸன் 2. தீஸன்- கரலியத்த பண்டார
3. தீஸன்- தர்மபாலன் 4. விஜயன்- தர்மபாலன்

(18) சமாதானம் -நிலம்- பாண் என்பனவற்றுடன் தொடர்புடைய புரட்சி?
1. ரஷ்யப் புரட்சி 2. ஆங்கிலப் புரட்சி 3. பிரான்சியப் புரட்சி 4. ஜேர்மனியப் புரட்சி

(19) உலகின் மிகப் பெரிய புத்தர் சிலை எனக் கருதப்படும் பாமியன் புத்தர்சிலை காணப்படும் நாடு எது?
1. ஆப்கானிஸ்தான் 2. பாகிஸ்தான் 3.சீயம் 4.கம்போடியா

(20) மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறைக்கு பங்களிப்புச் செய்த சிலர் கீழே A,B,C என தரப்பட்டுள்ளனர். அவர்களுடைய நாடுகளை முறையே குறிப்பிடும் விடைத் தொகுதி?
A- தாந்தே B- ஹோமர் C. தோமஸ் மூன்
1. கிறேக்கம்- இத்தாலி- இங்கிலாந்து 2. இங்கிலாந்து- இத்தாலி- கிறேக்கம்
3. இத்தாலி- கிறேக்கம்- இங்கிலாந்து 4. இத்தாலி- இங்கிலாந்து- கிறேக்கம்

(21) இலங்கைக்கு வெளியேயும் தமது அதிகாரத்தைப் பரவச் செய்த மன்னர்களைக் கொண்ட விடைத் தொகுதி.
1. நிஸ்ஸங்க மல்லன்- கஜபாகு- பண்டுகாபயன் 2.மகாசேனன்- கஜபாகு- பண்டுகாபயன்
3. நிஸ்ஸங்கமல்லன்- மகாபராக்கிரமபாகு- கஜபாகு 4.4ஆம் பராக்கிரமபாகு- மகாபராக்கிரமபாகு-மகாசேனன்

(22) பிரித்தானியர் ஆட்சியில் இலங்கை பெருந்தோட்டங்களில் பல்வேறு தொழிற் சுரண்டல்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வந்த தென்னிந்தியத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து தொழிற்சங்கம் அமைப்பதில் வெற்றிகண்டவர்.
1.A.E.குணசிங்க 2.திரு.நடேசஐயர் 3.ஆ.தொண்டமான் 4.சௌமியமூர்த்தி தொண்டமான்

(23) பியட்மென்டிஸ் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை வலியுறுத்தி மீள் பிறப்பு என்னும் பத்திரிகையை வெளியிட்டவர்.
1. யோசெப் மிசினி 2.கரிபால்டி 3.கவுனட் கபூர் 4.நெப்போலியன்

**(மிகுதி அடுத்தவாரம்)**

இப்பத்திரிகை இன்.'போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 19.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

19-09-2012

# கல்வி ஒளி

தமிழ்நாதம்

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 14

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## நாடகமும் அரங்கியலும் (மாதிரி வினாத்தாள்)

**பகுதி I (தொடர்ச்சி)** **நேரம்:3.00 மணித்தியாலம்**

31)கவிதையியல் நூலின் ஆசிரியர்
1.அரிஸ்ரோட்டில் 2.பிளேட்டோ 3.சோக்கிரட்டிஸ் 4.இப்சன்

32)சிங்கள மக்களது தேசிய நடனம்
1.கண்டிய நடனம் 2.பரதம் 3.குச்சுப்புடி 4.கதகளி

33)தமிழில் இசை நாடகங்களிற்கு ஒப்பான சிங்கள வடிவம்
1.தகசுட்ட கன்னிய 2.தொவில் 3.நூர்த்தி 4.ஹொகம்ஹறிய

34)மனமே நாடகத்தினை தயாரித்தவர்
1.ஜோன் டி. சில்வா 2.எதிர்வீர சரத்சந்திரா 3.சோமலதா சுபசிங்க 4.பராக்கிரம நெரியல்ல

35)குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதல் நாடகம்
1.உறவுகள் 2.அருமை நண்பன் 3.வையத்துள் தெய்வம் 4.வாற் பேத்தை

36)இருதுயரங்கள் நாடகத்தின் நெறியாளர்
1.இ. முருகையன் 2.நா. சுந்தரலிங்கம் 3.அ. தாஸிஸியஸ் 4.க. சிதம்பரநாதன்

37)அருகில் உள்ள படம் வெளிப்படுத்தும் உணர்வு



1.கோபம் 2.பயம்
3.ஆச்சரியம் 4.சோகம்

38)அருகில் உள்ள படம் குறிக்கும் நாடக வகை



1.யதார்த்தம் 2.குறியீடு
3.அபத்தம் 4.வசனநாடகம்

39)அருகில் உள்ள படம்



1.கதகளி 2.கூத்து
3.நடனம் 4.மணிப்புரி

40)அருகில் உள்ள நாடக வியலாளர்



1.அ.தாஸிஸியஸ் 2.அரசு
3.மௌனகுரு 4.க. கணபதிப்பிள்ளை

**(40x1=40 புள்ளிகள்)**

**பகுதி II**

**பின்வருவனவற்றில் முதலாவது வினாவிற்கும், ஏனையவற்றுள் ஏதாவது நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01)
1.மழை எனும், நாடகம் வேறு எப்பெயரில் நிகழ்த்தப்பட்டது? (01 புள்ளி)
2.தப்பு வாத்தியம் பயன்படுத்தப்படும் கூத்து எது? (01 புள்ளி)
3.தேவலோகயானை எனும் நாடகத்தின் ஆசிரியர் யார்? (01 புள்ளி)
4.தமிழ் நவீன நாடகத்தின் தந்தை யார்? (01 புள்ளி)
5.சமூக மாற்றத்திற்கான நூலின் ஆசிரியர் யார்? (01 புள்ளி)

6.வி.வி. வைரமுத்துவிற்கு புகழீட்டித்தந்த பாத்திரம் எது? (01 புள்ளி)
7.அண்மையில் மறைந்த நாடகத்துறை சார்ந்த பேராசிரியர் யார்? (01 புள்ளி)
8.வருடா வருடம் நாடக விழா கொண்டாடும் பாடசாலை எது? (01 புள்ளி)
9.இசை என்றால் என்ன? (02 புள்ளி)
10.நெறியாழ்கை என்றால் என்ன? (02 புள்ளி)

02)
1.அபிநயம் என்றால் என்ன? (02 புள்ளி)
2.நால்வகை அபிநயங்களை குறிப்பிடுக. (04 புள்ளி)
3.நாடகத்தில் பெறும் முக்கியத்துவத்தினை குறிப்பிடுக. (06 புள்ளி)

03)
1.ஈழத்தில் பேச்சுத் தமிழில் நாடகம் படைத்த முன்னோடி யார்? (02 புள்ளி)
2.அவரது நாடகம் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளி)
3.அவை நாடக உலகில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறிப்பிடுக. (06 புள்ளி)

04)
1.நடிப்பு என்றால் என்ன? (02 புள்ளி)
2.நடிகருக்கு அவசியமான பயிற்சிகள் யாவை? (04 புள்ளி)
3.நடிகர் பயிற்சியில் ஈடுபட வேண்டியதன் முக்கியத்துவம் யாது? (06 புள்ளி)

05)
1.'எந்தையும் தாயும்' நாடகம் பேசும் மையப் பிரச்சினை யாது? (02 புள்ளி)
2.இதில் இடம் பெறும் பாத்திரங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளி)
3.இந்த நாடகம் சமூகத்தில் பெறும் இடத்தினை மதிப்பிடுக. (06 புள்ளி)

06)'விழிப்பு' நாடகத் தலைப்பு எத்துணை பொருத்தமானது என்பதற்கான உமது கருத்துக்களினை முன்வைத்து ஆராய்க. (12 புள்ளி)

07)அரங்க மூலம் ஒன்றினைக் குறிப்பிட்டு நாடக உருவாக்கத்தில் அது பெறும் செல்வாக்கினை மதிப்பிடுக. (12 புள்ளி)

**தொகுப்பு: எஸ்.ரி. அருள்குமரன் B.A. (Hons.) M.A.,**
**எஸ்.ரி. குமரன் B.A. (Hons.) M.A.,**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012**
**சைவநெறி (பகுதி - I) விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 2 | 3) 4 | 4) 3 | 5) 1 | 6) 3 | 7) 2 |
| 8) 1 | 9) 3 | 10) 4 | 11) 2 | 12) 4 | 13) 3 | 14) 1 |
| 15) 3 | 16) 1 | 17) 3 | 18) 2 | 19) 3 | 20) 2 | 21) 3 |
| 22) 2 | 23) 1 | 24) 2 | 25) 3 | 26) 4 | 27) 1 | 28) 1 |
| 29) 2 | 30) 3 | 31) 3 | 32) 1 | 33) 3 | 34) 2 | 35) 1 |
| 36) 3 | 37) 4 | 38) 1 | 39) 3 | 40) 3 | | |



(07) இலங்காபுரத்தை நீதிமா மன்னன் எல்லாளன் ஆட்சி செய்த போது ஈழத்திற்கு வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்க முடியாத சம்பவம்?
1. தீசன் சூலகத்திதூப மந்திரத்தை உபதேசிக்கப் பெறல்
2. பண்டுகாபயனின் பிறப்பு
3. ஐந்து தமிழர்கள் இலங்கையைக் கைப்பற்றல்
4. விஜயன்- குவேனி திருமணம்

(08) 1806 இல் உரோமப் பேரரசை இல்லாதொழித்த நெப்போலியன் 12 சிறு அரசுகளை இணைத்து "ரைன்" சமஷ்டி அரசை உருவாக்கிய போது அதில் இணைத்துக் கொள்ளப்படாத பிரதேசம் ஒன்று?
1. பாவேரியா 2. டஸ்கனி 3. சக்சனி 4. ஹெசே

(09) இத்தாலி ஐக்கியப்படுத்துவதற்கு முன்னர் ஆஸ்திரியா தன்வசம் வைத்திருந்த பகுதிகளைக் குறிப்பிடும் விடை?
1. பர்மா, மொடனா, லொம்பாடி 2. பர்மா, மொடனா, சாடினியா
3. மொடனா, லொம்பாடி, சாடினியா 4. லொம்பாடி, சாடினியா, பியட்மன்ட்

(10) போர்த்துக்கேயருக்கு எதிராக கள்ளிக்கோட்டை முஸ்லிம் மன்னரின் உதவியை நாடிய யாழ்ப்பாண மன்னன் யார்?
1. காசிநைனார் 2. 1ஆம் சங்கிலியன் 3. புவிராஜ பாண்டாரன் 4. பெரிய பிள்ளை

(11) கியூ கடிதத்துடன் தொடர்புடையவரையும் அவரது நாட்டையும் சரியாகக் குறிப்பிடும் விடை?
1. 2ஆம் ஒரேஞ் வில்லியம்- பிரித்தானியா 2. வில்லியம் ஸ்டாட் கோல்டர்- ஒல்லாந்து
3. கியூ பொய்ட்- ஒல்லாந்து 4. பன் ஏங்கல் பெக்- பிரித்தானியா

(12) பிரித்தானிய வர்த்தகக் கம்பெனியின் ஆட்சிக்கு எதிராக இலங்கையர்கள் மேற்கொண்ட கிளர்ச்சிக்கு தீர்வாக மியூரன்குழுவினர் முன்வைத்த சிபாரிசுகளில் உள்ளடங்காதது?
1. ஒல்லாந்த நீதிமன்ற முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்
2. நீதிவிசாரணையையும் வரி அறவிடுதலையும் வெவ்வேறு அதிகாரிகளிடம் ஒப்படைத்தல்
3. கீழ்மட்ட- நீதிமன்றமாக மாவட்ட நீதிமன்றை அமைத்தல்
4. வரி ஏலவிற்பனை முறையை இல்லாமற் செய்தல்

(13) இலங்கையில் தோற்றம் பெற்ற பின்வரும் அரசியல் யாப்புக்களை ஒழுங்குபடுத்தும் போது சரியான விடை யாது?
A.கோல்புறூக், கமறன் யாப்பு B.மனிங்டிவோன்சயர் யாப்பு
C. 1920ஆம் ஆண்டு யாப்பு D.குறூமக்கலம் யாப்பு
E. சோல்பரி யாப்பு F.2ஆம் குடியரசு யாப்பு
G. 1972ஆம் ஆண்டு யாப்பு H.டொனமூர் யாப்பு
1. A,D,C,B,H,E,G,F 2. A,D,C,B,E,H,G,F
3. A,D,C,H,E,B,F,G 4. A,B,C,D,H,E,G,F

(14) A - மாகாணங்களை ஐந்தாகக் குறைத்தல்
B - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கல்
C - சர்வஜன வாக்குரிமை வழங்கல்
D - படித்த இலங்கையர் பதவி ஏற்படுத்தப்படல்
குறூமக்கலம் யாப்பு சீர்த்திருத்தத்தில் இடம்பெற்ற விடயங்களை உள்ளடக்கிய விடை
1. A,C ஆகியன 2.B,C ஆகியன 3.B,D ஆகியன 4.A,D ஆகியன

ஆசிரியர்:க.ரவிக்குமார் B.A.,M.A.,Dip.in Teach., NCT ) நேரம்: 1 மணித்தியாலம்

*** எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
*** ஒன்று தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

பகுதி - I

(01) "தகுதித் தன்மை நோக்கி இறந்தகால நிகழ்ச்சிகளை பிற்காலம் எழுதுமாயின் அதுவே வரலாறு" என கருத்துரைத்த வரலாற்று ஆசிரியர்.
1. பர்க்கார்ட் 2. கார்லைல் 3. ஜீ.எம்.திரெவெலியன் 4. ரீ.எஸ்.எலியற்

(02) வரலாற்றிற்கு முந்திய யுகம் தொடக்கம் இலங்கையில் மனித இனம் வாழ்ந்து வருகின்றதென்பது வரலாற்றாளர்களின் கருத்தாகும். அவ் வரலாற்றாளர்களின் நோக்கில் இலங்கையில் வாழ்ந்த மனித இனம் என கருதப்படுவது?
1. ஹோமோ எபிதிகஸ் 2. ஹோமோ நியண்டதாஸ் 3. ஹோமோ சோப்பியன் 4.ஹோமோ இரெக்டஸ்

(03) ஓநாயிடம் பால் குடித்து வளர்ந்த சந்ததியினர் எனக் கருதப்படுபவர்கள் பின்வருவோரில் யார்?
1. இலங்கை ஆரிய மக்கள் 2. ரோமாபுரி மக்கள் 3.துருக்கிய தேச மக்கள் 4. யூத மக்கள்

(04) இலங்கை பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் தந்த வெளிநாட்டவர்கள் சிலர் நிரல் 1 இலும், அவர்கள் வாழ்ந்த நாடுகள் நிரல் 11இலும் உள்ளன. நிரல் 1 இற்கு ஏற்ப நிரல் 11ஐ பொருத்தும் போது சரியான விடை யாது?

| நிரல் 1 | நிரல் 11 |
|---|---|
| 1.ஒசினி கிறிட்டஸ் | A.சீனா |
| 2.பாகியன் | B.உரோம் |
| 3.மார்க்கோபோலோ | C.வெனிஸ் |
| 4.ஜோன் டி | D.இத்தாலி |
| | E.கிறேக்கம் |

1.A,B,C,D 2. E,A,B,C 3.E,A,C,D 4.E,A,B,D

(05) "தற்காலத்திலும் எதிர்காலத்திலும் நான்கு நிலைகளிலிருந்தும் வரும் மதகுருமாருக்கு காணிக்கையாக்கப் பட்டுள்ளது" என எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?
1.குகைக் கல்வெட்டில் 2.குறுக்குக் கல்வெட்டில் 3.கற்பலகைக் கல்வெட்டில் 4.தூண் கல்வெட்டில்

(06) சிங்கள இராசதானிகள் மீது படையெடுப்பை மேற்கொண்ட தமிழ் மன்னர்கள் நிரல் I இலும், அவர்களிடம் ஆட்சியைப் பறிகொடுத்த சிங்கள ஆட்சியாளர்கள் நிரல் II இலும் உள்ளனர். நிரல் 1 இல் உள்ளவர்களிடம் ஆட்சியைப் பறிகொடுத்தவர்களை நிரல் II இல் இருந்து தெரிவு செய்தால் கிடைக்கும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.ஏழு தமிழர்கள் | A.சூரதிஸ்ஸ மன்னன் |
| 2.சேனன், குத்திகன் | B.வட்டகாமினி அபன் |
| 3.இராஜேந்திர சோழன் | C.முதலாம் சேனன் |
| 4.பல்லவர்கள் | D.தாதுசேனன் |
| | E.5ஆம் மகிந்த |

1.B,A,E,C 2.A,B,C,D 3.D,A,E,C 4.B,A,E,D





ஆசிரியர்: E.J.K. யுபன் நேரம்: 1 மணித்தியாலம்

**(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

01.பின்வரும் கணியங்களுள் காவிக்கணியம் எது?
(1) கதி (2) சக்தி (3) விசை (4) தூரம்

02.வெப்பநிலை அளக்க பயன்படும் சர்வதேச அலகு யாது?
(1) 0C (2) 0F (3) K (4) மேற்கூறியயாவும்

03.குருதியுறைதலில் பங்கெடுக்கும் குருதிக்கலவகை எது?
(1) வெண்குழியம் (2) செங்குழியம் (3) குருதிச்சிறுதட்டு (4) குருதித்திரவிழையம்

04.கலம் ஒன்றின் சக்தி பிறப்பாக்கி என அழைக்கப்படும் புன்னங்கம் எது?
(1) கரு (2) இழைமணி (3) நிறமூர்த்தம் (4) பச்சையவுருமனி

05.செக்கனிற்கு செக்கனிற்கு பத்து மீற்றர் என்பதை சரியாகக் குறிப்பது எது?
(1) S/S/10m (2) 10m /S/S (3) $10ms^{-2}$ (4) $mS^{-2}10$

06.ஆவியுயிர்ப்பு வீதத்தை அளப்பதற்கு பயன்படும் கருவி எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஆவியுயிர்ப்புமானி (2) பாரமானி (3) உறிஞ்சன்மானி (4) நீர்மானி

07.தாவரவுடலில் உணவு கடத்துவதற்குக் காணப்படும் இழையம் பின்வருவனவற்றுள் எது?
(1) காழ் (2) உரியம் (4) வேர்மயிர் (4) மேற்றோல்

08.4kg திணிவுடைய பொருளில் $2ms^{-2}$ எனும் ஆர்முடுகல் ஏற்படுத்தத் தேவையான விசையின் அளவு யாது?
(1) 4x2 N (2) 2/4 N (3) 4/2 N (4) தரவுகள் போதாது

09.செயற்கைக் கோள்களின் இயக்கம் நியூற்றனின் எத்தனையாம் இயக்க விதிக்கு பொருத்தமானது?
(1) 1ம் இயக்க விதி (2) 2ஆம் இயக்க விதி
(3) 3ஆம் இயக்க விதி (4) நியூற்றனின் இயக்கங்களுள் பொருந்தாது

10.$36kmh^{-1}$ எனும் கதியை செக்கனிற்கு மீற்றரில் தருவது எது?
(1) 36 x 1000 x 60 (2) $\frac{30 \times 1000}{60}$ (3) $\frac{60 \times 1000}{36}$ (4) $\frac{60}{36 \times 1000}$

11.நரம்புக்கலம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
(1) கணத்தாக்கம் கடத்தும் தொழில் புரிகின்றது.
(2) தனியான உட்காவு நரம்பு முளையையும் பல வெளிக்காவு நரம்பு முளைகளையும் கொண்டது.
(3) முலையூட்டிகளில் சராசரி கணத்தாக்க வேகம் $120ms^{-1}$ ஆகும்
(4) இது நியூரோன் எனவும் அழைக்கப்படும்.

12.8kg திணிவுடைய பொருளின் நிறை யாது? ($g = 10ms^{-2}$ )
(1) 60N (2) 80N (3) 100N (4) 120N

13.பின்வருவனவற்றுள் வலுப்பெறுமானம் கூடிய மின்சாதனம் எது?
(1) மின்னழுத்தி (2) மின்குமிழ் (3) அமிழ்ப்புவெப்பமாக்கி (4) மின்கலனடுப்பு

14.200kg திணிவுடைய நீரின் வெப்பநிலையை $30^0C$ இல் இருந்து $70^0C$ இற்கு உயர்த்துவதற்கு வழங்க வேண்டிய வெப்பசக்தியின் அளவு யாது? (நீரின் தன் வெப்பக் கொள்ளளவு $4200Jkg^{-1}\ oC^{-1}$ )
(1) 200 x 4200 x (30-70) (1) 200 x 4200 x (70-30) (3) $\frac{200}{100}$ x 4200x(30-70) (4) $\frac{200}{1000}$ x 4200x(70-30)

15.பின்வரும் செயற்பாடுகளில் சக்திச் செலவீட்டுடன் நடைபெறும் செயன்முறை எது?
(1) பரவல் (2) பிரசாரணம் (3) உயிர்ப்பான அகத்துறிஞ்சல் (4) மேற்கூறிய யாவும்.

16.ஓர் தசைக்கலம் ஒன்றின் கட்டமைப்பு இயல்புகள் தரப்பட்டுள்ளது. உருளையான வடிவம், குறுக்கு வரிகள் உடையது, பலகருக்கள், கிளையற்றது எனின் இது எவ்வகை தசை இழையமாக இருக்கக்கூடும்?
(1) வன்கூட்டுத்தசை (2) மழமழப்பானதசை (3) இதயத்தசை (4) வரித்தசை

17.ஈமோக்குளோபின் உற்பத்திக்கு அவசியமான விற்றமின் எது?
(1) Vit - A (2) Vit - B (3) Vit - B12 (4) Vit - B6

18.4kg திணிவுடைய பொருள் ஒன்று $2ms^{-1}$ வேகத்தில் இயங்குகின்றது எனின் அது கொண்டிருக்கும் இயக்கசக்தியின் அளவு
(1) ½ x 4 x 42 (2) ½ x 4 x 22 (3) ½ x 2 x 42 (4) ½ x 2 x 22

19.தாவர இலையின் குறுக்குவெட்டு முகத்தோற்றத்தில் பச்சையுருமணிகள் காணப்படாத கலம் எது?
(1) மேற்றோல்கலம் (2) காவற்கலம் (3) வேலிக்காற்கலம் (4) கடற்பஞ்சுக்கலம்

20.தாவரக்கலம் ஒற்றையும் விலங்குக்கலம் ஒன்றையும் வேறுபடுத்தி அறிய உதவும் பிரதான இயல்பு பின்வருவனவற்றுள் எது?
(1) கலமென்சவ்வு (2) குழியவுரு (3) கலச்சுவர் (4) புன்வெற்றிடம்

21.பின்வரும் தாவரங்களுள் எதில் ஆவியுயிர்ப்பு, கசிவு ஆகிய இரு முறைகளிலும் நீர் இழக்கப்படும்?
(1) கற்றாளை (2) சேம்பு (3) நாகதாளி (4) காசித்தும்பை

22.பின்வருவனவற்றுள் மிகப்பெரிய கலம் எது?
(1) கிளாமிடொமொனசு (2) அம்பா (3) தீக்கோழி முட்டை (4) மனிதனின் சூல்

23.மனிதவுடலில் காணப்படும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை பின்வருவனவற்றில் யாது?
(1) 23 (2) 46 (3) 21 (4) 18

24.பின்வருவனவற்றில் எதில் கரு காணப்படும்?
(1) செங்குழியக்கலம் (2) மேற்றோல்கலம் (3) வெண்குழியம் (4) குருதிச்சிறுதட்டு

25.செங்குழியம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது தவறானது?
(1) ஆயுட்காலம் 120 நாட்கள் (2) நிறப்பொருளாக ஈமோகுளோபின் காணப்படும்
(3) கரு காணப்படும் (4) இரட்டைக்குழிவு வடிவானது

26.சைக்கிள் டைனமோவில் நடைபெறும் சக்திமாற்றத்தைச் சரியாகக் குறிப்பது எது?
(1) மின்சக்தி → வெப்பசக்தி (2) இரசாயனசக்தி → மின்சக்தி
(3) இயக்கசக்தி → மின்சக்தி (4) இயக்கசக்தி → இரசாயனசக்தி

27.வெப்பசக்தி கடத்தப்படும் வழிமுறை பின்வருவனவற்றுள் எது/எவை?
(A) கடத்தல் (B) கதிர்வீசல் (C) மேற்காவுகை
(1) A மாத்திரம் (2) A,B மாத்திரம் (3) B,C மாத்திரம் (4) A,B,C யும்



28.1200W வலுவுடைய மின்சாதனம் ஒன்று 2 நிமிட நேரம் தொழிற்பட்டது எனின் வெளிவிடப்படும் வெப்பசக்தியின் அளவு யாது?
(1) 1200 x 2 (2) 1200 x 60 x 2 (3) 1200 x 60 (4) $\frac{1200x2}{60}$

29.சாற்றேற்றத்திற்கு உதவும் விசை/விசைகள் எது/எவை?
(A) வேரமுக்கம் (B) புவியீர்ப்பு விசை
(C) மயிர்த்துளைக் கவர்ச்சி விசை (D) ஆவியுயிர்ப்புஈர்ப்பு விசை
(1) A மாத்திரம் (2) A,B,C மாத்திரம் (3) A,B,D மாத்திரம் (4) A,C,D மாத்திரம்

30.அமீபாவின் உடலில் நீர் உட்புகுதல் எவ் அகத்துறிஞ்சல் முறையில் நிகழ்கின்றது?
(1) பரவல் (2) பிரசாரணம் (3) உயிர்ப்பான அகத்துறிஞ்சல் (4) மேற்கூறிய யாவுமன்று

31.பின்வருவனவற்றுள் எக்காரணி அதிகரிக்கும் போது ஆவியுயிர்ப்பு வீதம் குறைவடையும்?
(A) காற்றின் வேகம் (B) வளியின் ஈரப்பதன்
(C) வெப்பநிலை (D) மழைமேகம் சூழ்ந்திருத்தல்
(1) A,B மாத்திரம் (2) B,C மாத்திரம் (3) C,D மாத்திரம் (4) B,D மாத்திரம்

32.மனிதவுடலில் காணப்படும் மண்டையோட்டு முண்ணான் நரம்புகளினது எண்ணிக்கையை சரியாக குறிப்பது எது?
(1) 12சோடி, 12சோடி (2) 31சோடி, 31சோடி (3) 12சோடி, 31சோடி (4) 31சோடி, 12சோடி


33.பதார்த்தம் ஒன்று பெறும் வெப்பக்கணியம் தங்கியுள்ள காரணி அல்லாதது எது?
(1) பதார்த்தத்தின் திணிவு (2) பதார்த்தத்தின் தன்வெப்பக் கொள்ளளவு
(3) பதார்த்தத்தின் வெப்பக் கொள்ளளவு (4) பதார்த்தத்தின் வெப்பநிலைவித்தியாசம்

34.ஓர் வாகனம் $5ms^{-1}$ வேகத்திலிருந்து 5s இல் $10ms^{-2}$ எனும் உயர் வேகத்தை அடைந்துள்ளது எனின் வாகனத்தின் ஆர்முடுகல் $ms^{-2}$ இல் தருவது எது?
(1) $\frac{5-10}{5}$ (2) $\frac{5-5}{10}$ (3) $\frac{10-5}{10}$ (4) $\frac{10-5}{5}$

35.பின்வரும் எத்தாவரத்தில் டம்பல் வடிவக் காவற்கலம் காணப்படும்?
(1) வேம்பு (2) புல் (3) பூவரசு (4) தென்னை


36.ஒரு தாவரத்தில் ஆவியுயிர்ப்பு மிகக் கூடுதலாக நடைபெறுவது?
(1) இலை (2) தண்டு (3) வேர் (4) பட்டை

37.குருதியுறையாநோய் எனப்படுவது எது?
(1) இலுக்கேமியா (2) ஈமோபீலியா (3) குருதிச்சோகை (4) முடியுருதுரொம்போசில்

38.உருவில் A,B,C என்பன முறையே குறிப்பது


(1) இலைவாய், காவற்கலம், பச்சையவுருமணி.
(2) காவிற்கலம், இலைவாய், பச்சையவுருமணி
(3) பச்சையவுருமணி, இலைவாய், காவற்கலம்
(4) இலைவாய், பச்சையவுருமணி, காவற்கலம்


39.கதி தொடர்பான சரியான கூற்று எது?
(1) தூரமாற்று வீதம் (2) நியமஅலகு $ms^{-1}$ (3) எண்ணிக்கனியம் (4) மேற்கூறிய யாவும் சரி

40.படத்தில் காட்டியவாறு x,yஇல் என்ற இரு வாகனங்கள் ஒன்றையொன்று நோக்கி $2kmh^{-1}$, $4kmh^{-1}$ வேகத்தில் பயணிக்கின்றன. எனின் எவ்வளவு நேரத்தில் இரு  வாகனங்களும் சந்திக்கும்?

(1) 30 நிமிடம் (2) 60 நிமிடம் (3) 120 நிமிடம் (4) 240 நிமிடம்.

**NORTH LANKA IIT** ஆனது யாழ்ப்பாணத்திலே கணினிப் பட்டப்படிப்புக்களை முதன்மைப்படுத்தி இயங்கிவரும் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம் ISLES International University –UK, Cambridge Association of Managers – UKயுடன் இணைந்து வழங்கும் டிப்பிளோமா முதல் பட்டச்சான்றிதழ்கள் வரை சர்வதேச தரம் வாய்ந்ததொன்றென்று எச்சந்தர்ப்பத்திலும் நிரூபித்து வந்துள்ளதென்றால் அது மிகையாகாது.

தற்போது ISLES International University –UK ஆனது Universidad Empresarial de Costa Rica உடன் இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்ற பட்டசான்றிதழ்களை வழங்கவுள்ளது. இது ஆசிரியர்கள், அரசாங்க அலுவலர்களது பதவி உயர்விற்கு இன்றி அமையாததாகும். Universidad Empresarial de Costa Rica ஆனது International Association of Universities Year Book இல் பதிவுசெய்யப்பட்டதும் Sri Lanka UGC இல் அங்கீகாரமுடைய பல்கலைக்கழகமாகும்.




**NORTH LANKA IIT ஆனது**


Approved Centre of Cambridge Association of Managers – UK (www.cam-uk.org)

Partner Institution of ISLES International University –UK , (www.iiuedu.org)

Registered as a Higher Education Provider at


Accreditation Syndicate for Education & Training (ASET) UK & Malaysia (www.aset.com.my) & Quality Assurance Commission – UK (www.qac-uk.org ) என்பவற்றின் அங்கீகாரமுடைய நிறுவனமாகும். மேற்படி பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்கள் மலேசியாவில் உள்ள Malaysian High Commission, இலங்கையிலுள்ள Malaysian High Commission, British High Commission, இலங்கை Ministry of External Affairs, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என்பவற்றில் Endorse செய்யப்பட முடியும்.

Universidad Empresarial de Costa Rica இனது பட்டச் சான்றிதழ்களை Sri Lanka UGC இருந்து அங்கீகாரமுடையது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.




**Post Graduate Diploma in Computing**

ஒரு வருடகாலப் பகுதியை கொண்ட இக்கற்கைநெறி முடிவில் Cambridge Association of Managers - UK இனது சர்வதேச தர சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி Cambridge Association of Managers ஆனது British Qualifications(A Complete Guide to Professional, Vocational and Academic Qualifications in the United Kingdom) இனது 38(Page No 700), 37(Page No 697), 36(Page No 692) ஆவது பதிப்புகளில் இணைக்கப்பட்டுள்ள UK இல் உள்ள ஒரு நிறுவனமாகும்.










அத்துடன் BIS - UK (Department of Innovation and Skills- UK இல் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

இக் கற்கைநெறிக்கு ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். கலை, வர்த்தக, விஞ்ஞான பட்டதாரிகள் கணினித் துறையில் பட்டப்பின் படிப்பைத் பூர்த்திசெய்வதற்கு வசதியளிக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டப்பின் படிப்பினை பூர்த்திசெய்த பின்பு நடாத்தப்படும் Cambridge Association of Managers இனது பட்டமளிப்பு விழாவின் போது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இச் சான்றிதழ்களை நீங்கள் இலங்கையில் உள்ள British High Commission இல் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றை எமது அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

**M. Sc. in Computing**

மேற்படி PGDC கற்கைநெறியை பூர்த்திசெய்தவர்கள் M.Sc யையும் எமது நிறுவனத்தில் தொடர முடியும்.

MBA

வங்கிகள் மற்றும் ஏனைய துறைகளில் 06 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள பட்டதாரிகள் இக் கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்கு தகமையுடையவர்கள். மேலதிக விபரங்களினை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

**DBA**

MBA தகமையுடைய பட்டதாரிகள் இக்கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்கு தகமையுடையவர்கள். மேலதிக விபரங்களினை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

O/L தகமையுடன் Degree கற்பதற்கான Diploma

மேற்படி Cambridge Association of Managers இனது சர்வதேச தர சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் மேலும் ஒரு அரிய வாய்ப்பு O/L தகமையுடன் உள்ளவர்களுக்கு உரியதாகும். இவர்கள் மேற்படி Diploma கற்கைநெறிக்கு முன்பாக Foundation Course ஒன்றின் மூலமாக உள்வாங்கப்பட்டு பயிற்றப்படுவார்கள்.

**Advanced Diploma**

மேற்படி Cambridge Association of Managers இனது சர்வதேச தர Diploma சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் Advanced Diploma கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**Degree**

மேற்படி Cambridge Association of Managers இனது Advanced Diploma சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் Degree கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**PGDC**

மேற்படி Degree சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் Post Graduate Diploma in Computing கற்கை நெறியினை பயில முடியும்.

**ISLES International University**

மேற்படி பட்டச் சான்றிதழை வழங்கும் ISLES International University ஆனது தற்பொழுது உலகின் பல பாகங்களிலும் குறிப்பாக UK இலும் (Registered with the UK Register of Learning Providers, UK Provider Reference Number UKRLP No: 10027470) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அவற்றுள் சில:...**

ISLES INTERNATIONAL UNIVERSITY in Malaysia THE UNIVERSITY CHARTER in St Kitts & Nevis, East Caribbean OLLSCOIL ISLES IDIRNÁISIÚNTA in Dublin, Republic of Ireland ISLES INTERNATIONAL UNIVERSITY in London, United Kingdom

School of Doctoral Studies at Brussels (European Union) School of Graduate Studies at Cambridge (United Kingdom) School of Professional Studies at Oxford (United Kingdom)

School of Associate Studies at Basel (Switzerland)

Open Learning in the Middle East

Professional Studies in Africa & Asia The School of Professional Studies are associations established in the United Kingdom which provide validation schemes to centres in Africa and Asia. The Oxbridge associations are the Oxford Association of Management and the Cambridge Association of Managers. Postgraduate Diploma, Advanced Diploma and Diploma centres in Kenya Postgraduate Diploma and Advanced Diploma centers in Sri Lanka Diploma and Advanced Diploma centres in Singapore

Approved Centres: United Kingdom MERC Education

Kenya DALC Education Sri Lanka North Lanka IIT Singapore European Business School

India Indian Management Academy

Malaysia Credo Trust ISLES International University பற்றிய மேலதிக விபரங்களை www.iiuedu.org எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பப் படிவங்களை North Lanka IIT யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் வருடம் September 29 இல் UK(Oxford) இல் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இவ்வருடம் October 27 Malaysia வில் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இதில் இவ் வருடம் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்யும் பட்டதாரிகள் கலந்துகொள்ள முடியும்.

HND, HNDA முடித்த மாணவர்கள் 6-9 மாத காலப்பகுதிக்குள் B.Com. with Computer Application கற்கை நெறியை பூர்த்தி செய்ய முடியும். விபரங்கள் நேரில்....

ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான விரிவுரை நேரங்கள் அவர்களின் வசதிக்கேற்ப ஒழுங்குகள் செய்துதரப்படும்.

விண்ணப்பிக்கும் சகலரும் Senate சபையின் வழிகாட்டலுடன் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவார்கள்.

**Senate அங்கத்தவர்கள்**

Prof.K.Devarajah
Prof. T.Velnumby
Prof.V.Chinnathamby
Prof. V.P.Sivanathan
Dr.Sarathchandra (World Bank Adviser for South Asia )
Dr.R.Surenthirakumar
Dr.S.J.M.Sahajan
Lect.S.Anpalagan
Mr. Angajan Ramanathan

A/L பரீட்சையின் மற்றும் பெறுபேறுகளின் பின்பு உங்கள் வளமான எதிர்காலத்திற்கான முதல் வாய்ப்பு!!
UGC அங்கீகாரமுடைய மற்றும் சர்வதேச தரமுடைய கணினி பட்டதாரியாகும் வாய்ப்பு யாழ் மண்ணில்...

NORTH LANKA IIT & ISLES INTERNATIONAL UNIVERSITY
Jaffna, Sri Lanka
UK, IRELAND, MALAYSIA, KENYA & ST.KITS & NEVIS
இணைந்து வழங்கும்
மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

5 வது Batch இல் இணையுங்கள்!

B.Sc. in Computer Science
B.Com with Computer App.
Duration: 1 -- 3 Years with A/L / O/L

P.G.Dip. in Comp. Sc. >> M.Sc.
MBA >> DBA
Duration: 1 Year Any Degree

மேற்படி புலமைப் பரிசில் திட்டம் எமது Senate உறுப்பினர்களது வழிகாட்டலில்..

Senate of NLIIT
Prof.K.Devarajah
Prof. T.Velnumby
Prof.V.Chinnathamby
Prof. V.P.Sivanathan
Dr.Sarathchandra
Dr.R.Surenthirakumar
Dr.S.J.M.Sahajan
Lect.S.Anpalagan
Mr. Angajan Ramanathan
மேலதிக விபரங்களுக்கு ...
NORTH LANKA IIT
#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Phone :- 021567 7774

வெல்லுங்கள்! 10% முதல் 70% வரை கற்கைநெறிக் கட்டணம் Free!

எமது வாழ்த்துக்கள்!!




Dr. C.A Sarathchandra - DBA
(எமது பல்கலைக்கழகத்தில் DBA பட்டம் பெற்று தற்போது World Bank இனது தெற்காசிய பிராந்தியத்திற்கான ஆலோசகராவார். அத்துடன் Merchant Bank, Peoples Bank, HDFC Bank என்பவற்றின் உயரதிகாரியுமாவார். இவர் தற்போது NORTH LANKA IIT இனது Senate உறுப்பினருமாவார்.)

Mr. R.Ganaraj - MBA
(NSB - Pointpedro Branch)

Mr. S.Naathasoruban - MBA
(NSB - Dehiwala Branch)

Mr. S.Prashanthan - M Sc.
(NSB - Jaffna Branch)



கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ. மஜீத் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இந்தவகையில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சராக நஜீப் ஏ. மஜீத் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி வேட்பாளர் பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் போட்டியிட்ட இவர் 11,726 விருப்பு வாக்குககளைப் பெற்று மாகாண சபைக்கு உறுப்பினராக தெரிவானவர் ஆவார்.

# ஸ்ரீல.மு. கா அமைச்சு பதவிகளை கோரவில்லை

## அமைச்சர் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசில் எந்த அமைச்சு பதவிகளையும் கோரவில்லை என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடம் அமைச்சு பதவிகள் கோரியதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானது என அவர் குறிப்பிட்டார்.

"முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக அரசாங்கத்திலிருந்து கொண்டு குரல் கொடுப்போம். தற்போதைய சூழலில் முஸ்லிம் சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய சில விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் மிக விரைவில் அமுல்படுத்தப்படும்" என அவர் தெரிவித்தார்.

"அத்துடன் "கிழக்கு மாகாண ஆட்சியை அமைத்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்தினோம்.

இதன் பின்னரே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்ட மைப்பு ஆதரவு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது" என அவர் தெரிவித்தார்.

இந்த தீர்மானத்தினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏமாற்றமடைந்திருக்கலாம். எனினும் எதிர்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சினேகபூர்வமாக செயற்படும் என அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

# பிரச்சினைகளை சிவில் பாதுகாப்பு குழுவினர் முன்னின்று தீர்க்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர்

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கிராம மட்டத்தில் அபிவிருத்தியை சிவில் பாதுகாப்பு குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தால் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இதன்போது தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இக்கூட்டம் நடை-பெற்றது. ஒவ்வொரு கிராம மட்டத்திலும் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள் மற்றும் தவறுகள் சுட்டிக் காட்டப்படும் சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் முன் நின்று தீர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு தீர்த்து வைக்கப்படுமானால் நல்ல சமூக கட்டமைப்பினை உருவாக்க முடியும் என மேலும் அரச அதிபர் கூறினார்.

இக்கூட்டத்தின் போது கிராம மட்டங்களில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றைத் தீர்வுக்கு கொண்டு வரும் முறையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட பிர-திப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா முன்னிலையில் தீர்வுக்கு கொண்டுவரப்பட்டன.

இந்நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்ரின் அலென்ரின், யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செ.ஸ்ரீ.குகநேசன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் காங்கேசந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்:

# மேலும் 2 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் சரண்

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் மேலும் 2 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றில் சரணடைந்தனர். குறித்த 2 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

கடந்த ஜுலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் குறித்த 43 பேரும் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேநேரம் மன்னார் நீதவானுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக அமைச்சர் றிஸாட் பதியுதீன் மீதான வழக்கும் எதிர்வரும் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மாலக்க என்னை தாக்கவில்லை: நீதிமன்றத்தில் மேஜர் தெரிவிப்பு

தன் மீதான தாக்குதலில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா மற்றும் ரெஹான் விஜேரத்ன ஆகியோர் சம்பந்தப்படவில்லை என்று சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இராணுவ மேஜரான பிரதீப் சுசேன நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பில் நீதிமன்றில் மகஜர் ஒன்றையும் கையளித்த இராணுவ மேஜர், இந்த வழக்கினை சுமூகமாகத் தீர்த்துக் கொள்ள தான் விரும்புவதாகவும் கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரத்னவிடம் குறிப்பிட்டார்.

கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கொழும்பு ஹில்டன் ஜெய்க் ஹோட்டலில் வைத்து தன் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று மாலக்க சில்வா, ரெஹான் விஜேரத்ன உட்பட ஏழு பேருக்கு எதிராக மேற்படி மேஜரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், காலை இவர்கள் ஏழு பேரும் பொலிஸில் சரணடைந்த நிலையில் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை விளக்கமறி யலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி சூட்டில் இளைஞர் பலி

அபிங்கிரிய பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் 27 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஹெரோயினுடன் கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்த விமானப்படையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி நேற்று குறித்த பெண்ணிற்கு விளக்கமறியலை வழங்கியுள்ளார். இவர் 540 கிராம் ஹெரோயின் அடங்கிய 17 பக்கெற்றுக்களை தம்வசம் வைத்திருந்துள்ளார்.

இவரது சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட பிணையை நிராகரித்த நீதிபதி குறித்த பெண்ணை இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

ஹேரோயின் போக்குவரத்திற்கு உடந்தையாக செயற்பட்டதாக இவ்விமானப்படையைச் சேர்ந்த பெண் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

# மதுரைக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையில் சிக்கன விமான சேவை

## நாளை முதல் ஆரம்பம்

மதுரைக்கும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கும் இடையில் சிக்கன விமான சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை 20ஆம் திகதி முதல் இந்த விமான சேவை ஆரம்பிக்க ப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஏற்பாடுகளுடன் மதுரையிலிருந்து சுமார் 50 பேர் அடங்கிய வர்த்தகக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக நடவடிக் கைகளை மேம்ப டுத்தும் திட்டத்தின் கீழ் இந்த விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

# மனைப்பொருளாதார திட்டத்தின் கீழ் உபகரணங்கள் கையளிப்பு

வாழ்வெழுச்சி மனைப்பொருளாதார திட்டத்தின் கீழ் தேசிய அருங்கலைப் பேரவையில் பயிற்சி பெற்றவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மோகனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து நடத்திய இப்பயிற்சி நெறியில் சுமார் 2300பேர் தெரிவு செய்யப்பட்டு 667பேர் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

பயிற்சிகளை நிறைவு செய்த 667 பேரில் முதற்கட்டமாக் கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பயிற்சியாளர்கள் 107 பேருக்கும் ரூ.10,000 பெறுமதியான உபகரணங்கள் இன்றைய தினம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் தேசிய அருங்கலை பேரவையின் உத்தியோகஸ்தர்கள் உட்பட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி சபையின் யாழ். முகா மையாளர் கெங்காதரன் மற்றும் பயிற்சியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நவீனக் கவிதைகளில் பெண்ணியம்



சமூகம் என்பது ஆண், பெண் உறவின் மீதே கட்டமைக்கப் பட்டதாகும். ஆனால் பெண்ணை பலவிதங்களில் ஆணினம் கட்டுப்படுத்தியே வந்துள்ளது. தொடக்கக் காலம் முதலே அடிமைப்பட்டிருந்த பெண்கள் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியே வந்துள்ளனர். இலக்கியங்களே பதிவு செய்து வைத்துள்ளன. சங்ககாலத்தில் ஔவையும் தன் பெண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். கைம்மை நோயின் கொடுமையை பெருங்கோப்பெண்டும் கணவரை இழந்த பெண்கள் மீது நடத்தப்படும் சடங்கு வன்முறையை தாயங்கண்ணியாரும் சங்க காலத்திலேயே பெண்ணியம் பேசியுள்ளனர். இம் மரபு நீடித்து இருபதாம் நூற்றாண்டில் புதுக்கவிதையிலும் தொடர்கிறது.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்

என சமத்துவம் போதித்துள்ளார் பாரதியார். பாரதியைத் தொடங்கி

வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்
வாங்கவே வந்திடு வார்கள் சில பேர்கள்
நல்ல விலை பேசுவார் - உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்

என பாடியுள்ளார் பாரதிதாசன். பலரும் பெண்ணியம் குறித்து இலக்கியம் படைத்து வருகின்றனர். கவிதை, கதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் எதுவாயினும் பெண்ணியம் பேசுவது நீடிக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த இலக்கியம் இன்று நவீனத் தளத்தில் இயங்கி வருகிறது. இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய பயணத்தில் நவீன யுகத்தில் மட்டுமே பெண்ணியத்துக்கான குரல் ஓங்கி ஒலிக்கின்றது. ஆண் படைப்பாளிகளின் பங்களிப்பு இருப்பினும் பெண் படைப்பாளிகளின் பங்களிப்பே பிரதானம். குறிப்பாக கவிஞர்கள்.

பாவ விமோசனத்திற்கு
ராமனுக்காக காத்திராதே..
அவன் சீதையின்
அக்னிப் பிரவேச ஆயத்தங்களில்
ஆழ்ந்திருக்கிறான் என பெண்களுக்கு
அறிவுறுத்தி,
இராவணன் கற்புக்கும்
இவளே பொறுப்பு

என ஒரு புதுப் பார்வையை , ஒரு புது சிந்தனையை , ஒரு புது கருத்தை பெண்ணியத்துக்கு ஆதரவாய் வைத்துள்ளார் பெண்களை பெருமைப்படுத்தி உள்ளார் கவிஞர் கனிமொழி. தொகுப்பு அகத்தினை. தொன்மத்தை முன் வைத்தே பெண்ணியம் பேசுவதில் திறமையாளர். அடுத்து தீண்டாமை.

சட்டம் எழுதியாயிற்று. எல்லாச் சாதியும்
கோயிலுக்குள் வர.
எந்நாடு போனாலும்
தென்னாடு உடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள்
மட்டும் ஆவதே இல்லை

என சமத்துவம் பேசியுள்ளார். உரிமையை முன் வைக்கிறார். தீண்டாமை சொல்லை புறக்கணிப்படும் பெண்களுக்காக பயன்படுத்தி தன் வாதத்தை வைத்து ஒரு விவாதத்தை எழுப்பியுள்ளார். சிவன் தன்னுடம்பில் பாதியை பார்வதி என்னும் தன் மனைவிக்கு கொடுத்தாக புராணம். ஆனால் சிவன் கோவிலுக்குள் மாதவிலக்குள்ள பெண்கள் நுழைய கூடாது என்பது பெண்களுக்கு எதிரானது . புறக்கணிப்படும் ஒரு செயல். இதையே கவிஞர் கனிமொழியின் கவிதை எதிர்க்கிறது.

ஒரு நாளேனும்
வாழ வேண்டும்
நான் நானாக

என விருப்பப்படுகிறார் கவிஞர் மு.சத்யா. இக்கவிதை இடம்பெற்ற தொகுப்பு "இங்கு எதுவும் நிகழவில்லை. இவ்வரிகள் எளிமையாய் இருப்பினும் இதில் வெளிப்பட்டுள்ள செய்தி வலிமையானது. பெண்ணுக்கான சுயம் பேசுகிறது. பெண்ணை பெண்ணாக இருக்க விடாத சமுதாயத்தை எதிர்க்க விரும்புகிறது. தொடர்ந்து

என்றைக்கேனும் ஒரு நாள்
நான் காணாமல் போய்விட்டால்
அடுப்படியின் பரணிலோ
சிலிண்டரின் மறைவிலோதான்
முதலில் தேடுவார்கள் போலும்

என புலம்பலாயிருந்தாலும் காலம் காலமாய் பெண்கள் சமையலறையிலேயே வைக்கப்பட்டிருப்பதற்கு எதிரானது. பெண் தொலைந்து போனாலும் சமையலறைக்குள்ளேயேதான் தேட வேண்டும் என்னும் கருத்து சிந்தித்தலுக்குரியது. ஒரு வீட்டின் சமையல் அறையிலிருந்த பெண் இன்னும் விடுதலை அடைய வேண்டும் என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

கவிஞர் திலகபாமா ஒரு முக்கிய பெண் கவிஞர். எட்டவாது பிறவி தொகுப்பில் எழுதிய கவிதை

நான் தண்டவாளமாக
எப்போதும் உன் பயணம் என் மேல்
கழிவுகளை வீசிய படி நகர
எனக்குள் ஆசை உனை
விழ்த்திப் பார்க்க

என ஒரு பெண்ணாக தன் ஆசையை வெளிப்படுத்தியுள்ளார். இதை ஆவேசம் என்றும் கொள்ளலாம். இதன் தலைப்பு காதலன். தண்டவாளம் என்பதை பெண்ணுக்குக் குறியீடாக பயன்படுத்தியுள்ளார். ஆயினும் அவரின் வாழப்பழகிய சந்தன மரம் கவிதை ஆண்களின் அடக்கு முறைக்கு எதிரானது.

அந்த அழகிய அ(சி)றைக்குள்
நான் இருந்த இடத்தில் நீ பார்க்க முடியாது
வேர்கள் விட்டிருந்தேன்.
நாளை அவைகள் சுவர்கள் அஸ்திவாரம்
தாண்டிப் பயணக்கும் மண்ணோடு..
என் பயணங்களில்
விரிசல் விடத் துவங்கியிருக்கும் சுவர்கள்

பெண்னை கட்டுப்படுத்த முடியாது என்கிறார். பெண்ணியம் என்பது மீறுதலுடையது எனவும் உணர்த்தியுள்ளார். இவர் பெண்ணியம் குறித்து அதிகம் பேசாவிடினும் பேசிய வரையில் வீரியமாயுள்ளது.

நவீன இலக்கியத்தின் முக்கியத்துவங்களில் ஒன்று குறியீடு. பெண் கவிஞர்கள் குறியீடாயும் பெண்ணிய பிரச்சனையை முன் வைத்துள்ளனர். கற்பாவை தொகுப்பில் கவிஞர் உமா மகேஸ்வரி எழுதியது

சமையலறையிலிருந்து பார்த்துக்
கொண்டிருந்தேன்
சுவரோடு பந்து விளையாடுகிறவனை
பந்தை எறிய எறிய
திருப்பியடித்தது சுவர் உற்சாகமாக
ஒரேயொரு முறையாவது பந்து வீச
சுவருக்கும் வாய்ப்புத் தந்திருந்தால்
இப்படி மூர்க்கமாய் உடைத்திருக்காது
எதிரே பிரதிபலித்த நிலைக் கண்ணாடியை

இதில் சுவரைக் குறியீடாக பயன்படுத்தியுள்ளார். பெண்ணை சுவராக பாவித்து கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சாட்சி வைத்த கொலைக்கயிறு தொகுப்பில் இதே தலைப்பில் எழுதப்பட்ட கவிதை

படித்தவன் லட்சியவாதியென்று
லட்சத்திற்கு வாங்கி விட்டு மிச்சமும்
வரவில்லையென்று கதவடைத்து
நெருப்பில் உடல் மூடி வேக வைக்கும்
போது
கழுத்தில் சுற்றியது பொன் கயிறல்ல
சாட்சி வைத்த கொலைக்கயிறெனப் புரியும்


எழுதியவர் கவிஞர் நா.சுப்புலட்சமி.

தாலியை சாட்சி வைத்த கொலைக்கயிறு என்பது கவனிப்பிற்குரியது.


வரதட்சனைக்கு எதிரானது. நேரிடையாகவே தாக்குகிறார்.

பெண்மையைப் போற்றுகிறது.
இக்கவிதை ஊர்க்கூடி
கொள்ளையடித்தனர்

வரதட்சனை என்னும் கவிஞர் இளம்பிறையின் ஹைக்கூவை நினைவுக்கூரச் செய்கிறது. வரதட்சனை வெளிப்படையான ஒரு பிரச்சனை. இதன் தொடர்ச்சியாகவே பல சிக்கல்கள் உருவாகின்றன. புதுக் கவிதையில் தொடங்கிய இப்பிரச்சனைக்கு எதிரான சிந்தனை நவீன இலக்கியத்திலும் தொடர்கிறது.



## பெண்ணுக்காக...



அன்பு சகோதரியே.......
ஊண், உடம்பு உயிர் கொண்ட
அனைத்தும் இவ்வுலகில் ஒன்றே...
அனைத்தும் இங்கு உயிரே..
நெருப்பில் போட்டால்
பிணம் கூட எழுந்து நிற்கும்,
காலமெல்லாம்,
அடிமை நெருப்பில் கனன்றும்,
விழித்துக்கொள்ள
இன்னுமா தாமதம்..
சாதனைகள் புரிய உவப்பு
இருப்பினும்,
சிகரங்கள் தொடும் தெம்பு
இருப்பினும்,
நமது உணர்வுகளும், கனவுகளும்
தொண்டை குழிக்கும், நெஞ்சு
குழிக்குமான இடைவெளிகளில்
அமிழ்ந்து போகும்
அநியாயம் இன்னும்
எத்தனை காலங்கள் தொடரும் ?
கலாச்சார பதிவுகளுக்காக
நமது காலடித்தடங்கள்
அழிக்கப்படுவதை இன்னும்
எத்தனை நாள் விட்டு வைத்திருப்போம்...
கை தூக்கி விட காத்திருந்தால்
காலம் நமக்காய் தாமதிக்காது...
நமக்கான பாதையை நாமே வகுப்போம்..
முட்களில் நடப்பது நமக்கென்றும்
புதிதல்ல...
எது நமது உரிமை,
எது நமது சுதந்திரம் என்ற
விழிப்புணர்வு அற்ற பெண்டிரே !!!
விழித்துக்கொள்வோம்,
எல்லாருக்கும் எல்லாம்
சமமாய், நிறைவாய்
கிடைப்பது தான் சுதந்திரம்.
அதை கேட்டுப்பெறுவது தான்
நமது உரிமை.
கேட்காமல் எதுவும் கிடைக்காது,
தட்டாமல் எதுவும் திறக்காது,
திறக்காத கதவுகளை உடைப்போம்.
மண்ணில் போட்டு நசுக்கினாலும்,
வேர் விட்டு விருட்சமாவோம்....
வாழ்வோ தாழ்வோ.. இனி நம் கையில்..

பெ
ண்
ணி
ய
ம்

## ஆணுக்கும் பெண்ணுக்கும்

எப்படி நிகழ்ந்ததோ அது ஆணுக்கு பெண் -
அடக்கம் என்னும் சமாச்சாரம், சமபங்கு கொடுப்பதாய்
உன்னையும் வேலைக்கனுப்பி உன் திறமைகளை வெளிப்படுத்த எண்ணி
பாவம் அவளும் கஷ்டப் படுவானேன்
நிம்மதியாய் வீட்டில் இருக்கட்டுமே என நினைத்த இடத்தில் தான்
துரோகம் இழைக்கப் பட்டுவிட்டது
போல் உடல் கூசப் பார்க்கும்
கயவர்களுக்கு மத்தியில் மனம் கூசி போவாயோ
வீட்டில் தான் இருந்து விடேன் உனக்காக உழைக்கத் தான் -
நானிருக்கேனே என்று எண்ணியதில் தான் துரோகம் இழைக்கப்
பட்டுவிட்டது போல்அக்கம் பக்கம் கடைக்கு செல்கையில்
சோர்ந்து போகும் நீ -
பேருந்தில் எறி,நான்கு தெரு நடந்து,
எல்லோருக்கும் பதில் சொல்லி, எத்தனையோ எரிச்சல்களுக்கு மத்தியில் சிரித்து
நான் படும் இன்ன பிற அவஸ்தைகளை சரிபங்காய் நீயும் படுவானேன் என
தவறாய் யோசித்த இடத்திலிருந்து -
துரோகம் இழைக்கப் பட்டுவிட்டது போல்நானும் போயி -
நீயும் போயி -
இருவருக்கு மத்தியிலும் வாழும் பிள்ளைகள்
பாசமற்று ஏங்கிப் போகுமோ என்று நினைத்த சுயநலத்தில் தான்
உனக்கான துரோகம் -
இழைக்கப் பட்டுவிட்டது போல்
ஆணுக்கும் பெண் சமமாக வேண்டும்எவருக்கு
எவரும் தாழ்வாக வேண்டாம் என்றெல்லாம் எண்ணினாலும் -

எங்கோ இழைக்கப் பட்ட துரோகம் எதற்கோ எனக்கு நீ பயந்து
நடுங்குகையில் - உள்ளே உரைக்காமலில்லை வலிக்காமலில்லை.
என்னால் உன்னை என அழைக்க சம்மதித்த நீ,
என்னை வா போவென்றும்
சொல்ல அனுமதித்திடாத என் நடத்தை
ஒரு பக்கம் தாழ்ந்த தராசில் தானே நிற்கிறது??? என -
எல்லோரும் யோசிக்கும் நாள்
வெகு தேவையாகிப் போனது
இக்காலத்தில். உலகம் முழுக்க
பெண்ணியம் பேசுகிறார்கள் நானும்
ஆமென்று தலை அசைக்கிறேன், வீட்டில் - உனக்கந்த
சுதந்திரம் தரப்பட்டதா எனில் இல்லை என தலைகுனியும்
அசிங்கம் யாரால் காலவேகத்தினுள்
புகுத்தப் பட்டதோ??
என கூட்டம் போட்டெல்லாம் வேண்டாம் அவரவர் மனதிலாவது
யோசிக்க வேண்டிய தருணத்தில் தான் நிறைய பேர்
நிலை கொண்டுள்ளோமோ???

*வித்யாசாகர்.*

இன்னமும் அதை பெரிய பண்ணை என்று சொல்லாமல், அதற்குரிய பெயரான விலங்குப் பண்ணை என்கிற பெயரிட்டு அழைத்ததையே,, இந்த மரியாதைக்கு ஒரு சான்றாகச் சொல்லலாம். ஜோன்ஸைப் பாராட்டி, அவனுக்கு உதவுவதாக வீம்பு கூறுவதையும் மனிதர்கள் நாளடைவில் விட்டுவிட்டார்கள்.

தன் பண்ணை இனித் தன் கைக்கு வராது என்கிற தீர்மானத்துடன் ஜோன்ஸ் அந்தப் பிராந்தியத்தைவிட்டு வேறு இடத்துக்குப் போய்க் குடியேறிவிட்டான். விம்பர் மூலமாக ஏற்பட்டதைத் தவிர வெளி உலகத்துக்கும் விலங்குப் பண்ணைக்கும் நேரடியான தொடர்புகள் எதுவும் இல்லை இன்னமும்.

ஆனால் நெப்போலியன், பாக்ஸ்வுட் பண்ணை சொந்தக்காரரான பில்கிங்டனுடனோ அல்லது பிஞ்ச்ஃபீல்டு முதலாளியான ஃப்டெரிக்குடனோ உடனடியாக வியாபார ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப் போகிறது என்கிற வதந்தி மட்டும் எழுந்து எழுந்து அடிக்கடி அடங்கிக்




கொண்டிருந்தது. இந்த இருவரில் ஒருவருடன் மட்டும்தான் நெப்போலியன் உடன்படிக்கை செய்து கொள்ளும் என்பது தீவிரமாக வற்புறுத்தப்பட்டு வந்தது.


ஒரே சமயத்தில் இருவருடனும் ஒப்பந்தம் செய்து கொள்வதாக இல்லை நெப்போலியன். சற்றேறக் குறைய இதே சமயத்தில் பன்றிகள் திடீரென்று பண்ணை வீட்டுக்குள் குடியேறின. ஆரம்ப காலத்தில் பண்ணை வீட்டில் குடியிருப்பது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியதாக விலங்குகளுக்கு லேசான ஒரு ஞாபகம் இருந்தது. மீண்டும் ஸ்க்வீலர் எத்தனையோ சமாதானங்கள் கூறி, அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே என்று ஸ்தாபித்துவிட்டது.

பண்ணையின் அஸ்திவாரமாக விளங்கும் பன்றிகள் அமைதியான ஒரு இடத்தில்தான் தங்கள் வேலைகளைச் சரிவரக் கவனிக்க முடியும் என்றது ஸ்க்வீலர். இப்போதெல்லாம் நெப்போலியனைப் பெயர் சொல்லிக் குறிப்பதில்லை அது. தலைவர் என்றுதான் குறிப்பிடும். தலைவரின் கௌரவத்துக்கு ஏற்றது அந்த வீட்டில் வசிப்பதுதான், பன்றிக் கொட்டிலில் தலைவர் அடைபட்டுக் கிடந்தால், அது பண்ணையின் கௌரவத்துக்கே இழுக்கான காரியம் அல்லவா? இப்படியெல்லாம் ஸ்க்வீலர் பேசியும் மிருகங்கள் சிலவற்றிற்கு அதிருப்தியாகத்தான் இருந்தது.


பன்றிகள் சமையலறையில் சாப்பிட்டன என்பது மட்டுமின்றி படுக்கை அறைகளில் படுத்து உறங்கின என்று அறிந்தபோது விலங்குகளுக்கு மன நிம்மதியில்லாமல் போயிற்று. பாக்ஸர் வழக்கம்போல "நெப்போலியன் செய்வதே சரி" என்று சொல்லி விவாதத்தை முடித்துவிட்டது. ஆனால் புரட்சி காலத்தில் விதி ஒன்று, விலங்குகள் படுக்கையில் படுத்துறங்குவதைத் தடுத்ததாக க்ளோவருக்கு ஞாபகம் இருந்தது.

**(நாளை..)**

## வரைவோம் வாருங்கள்!



## இரண்டு ஓணான்கள்



இரண்டு ஓணான்கள் ஓர் இடத்தில் கூடிப் பேசிக்கொண்டிருந்தன. ஒன்று, "நம்முடைய ஜன்மம் என்ன ஜன்மம்! இது ஒரு வாழ்வா? ஏதோ தின்கிறோம், வாழ்கிறோம், அவ்வளவுதான். நமக்கு ஒரு பெயர் உண்டா? மதிப்பு உண்டா? நம்மைப் பற்றி ஒருவர் பேசுவது தான் உண்டா? ஒரு கலைமானாக நான் பிறந்திருக்கக் கூடாதா? அப்படிப் பிறந்தாலாவது ராஜாக்களின் தோட்டங்களில் உலாவலாமே!" என்று சொன்னது.

இப்படி அவை பேசிக்கொண்டிருந்தபோது ஒரு கலைமானை இரண்டு வேட்டை நாய்கள் விரட்டிக்கொண்டு வந்தன. ஓணான் இருந்த இடத்திற்கு முன்னால் கலைமான் வந்தபோது நாய்கள் நெருங்கி அதைக் கவ்விப் பிடித்து அங்கேயே குதறித் தள்ளின.

இதைப் பார்த்த மற்றொரு ஓணான், "இந்த வாழ்வையா வேண்டுமென்று விரும்பினாய்? இந்த மானின் கதியைப் பார்த்த பின்பாவது உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் நல்ல குணத்தைப் பெறுவாயாக" என்று சொல்லியது.

## கொலம்பஸின் அமெரிக்கப் பயணம்




இந்தியாவுக்கு கடல் மார்க்கமாகப் புதிய வழி கண்டுபிடிக்க முயன்று அமெரிக்காவை கண்டுபிடித்தவர் என்று வரலாற்றில் புகழ் பெற்றவர் கொலம்பஸ். அமெரிக்காவை கண்டு பிடித்தவர் கொலம்பஸ் என்று பொதுவாக கூறப்பட்டாலும் அவர் உண்மையில் கண்டு பிடித்தவை சில தீவுகளையே. எனினும் கொலம்பஸ் இந்தத் தீவுகளை கண்டுபிடித்ததால்தான் ஐரோப்பாவைச் சேர்ந்த பல்வேறு நாட்டினரும் அமெரிக்காவுக்குச் சென்று குடியேற வழி ஏற்பட்டது.

இத்தாலியைச் சேர்ந்தவரான கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1452 இல் பிறந்தார். சிறிய வயதிலேயே கடல் பயணங்களை மேற்கொண்டார். கடலில் மேற்கு திசையில் பயணம் செய்து இந்தியாவை அடைய முடியும் என்று கொலம்பஸ் நினைத்தார். தன்னுடைய கடல் பயணத்துக்கு உதவும்படி ஸ்பெயின் நாட்டு அரசரையும் அரசியையும் கொலம்பஸ் கேட்டுக்கொண்டார். அவர்களும் கோலம்பசுக்கு உதவ முன்வந்தனர். 1492 ஓகஸ்ட் 3 ஆம் திகதி கொலம்பசும் 120 மாலு மிகளும் கடல் பயணத்தைத் தொடங்கினார். நினா, பின்டா, சாந்தமரியா என்ற மூன்று கப்பல்களில் அட்லாண்டிக் பெருங்கடலில் மேற்கு நோக்கி பயணித்தனர். இவ்வாறு புறப்பட்டு சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின் சில தீவுகளை கண்டார். இவற்றில் ஒன்று "ஜீவானா" என்ற தீவு. தற்போது கியூபா என்ற பெய ரில் இத்தீவு அழைக்கப்படுகிறது.

## சிறுவர் அமுதம்

### எலியாரே! எலியாரே!



எலியாரே எலியாரே
எங்கே போறீங்க?
எலிசபெத்து ராணியாரைப்
பார்க்கப் போறேங்க.

ஏரி கடல் குறுக்கே வந்தா
என்ன செய்வீங்க?
ஏரோப்ளேன் மேல ஏறி
பறந்து செல்வேங்க.

பறக்கும்போது பசி எடுத்தா
என்ன செய்வீங்க?
ரொட்டி, வடை பலகாரம்
வாங்கித் திம்பேங்க....

### விடுகதைகள்




1.பூமியிலே வளராத மரம். கிளை உண்டு, இலை இல்லை. அது என்ன?

2.முப்பத்திரண்டு வெள்ளைச் சிப்பாய்களுக்கு நடுவே, ஒரு சிவப்பு ராசா. அது என்ன?

3.முதுகிலே மூட்டை சுமந்து, மூன்று மணிக்கு முழம் போவான். அவன் யார்?

4.முத்து மூடியிருக்கும். முக்காடு போட்டிருக்கும் முட்கள். நீண்டிருக்கும் மிடுக்கா வீற்றிருக்கும். அது என்ன?

5.பழகினால் மறக்காது. பயந்தால் விடாது. அது என்ன?

சுடோக்கு எண் 54 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 6 | 2 | 5 | 8 | 1 |
| 5 | 4 | 8 | 7 | 1 | 3 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 2 | 5 | 8 | 9 | 7 | 4 | 3 |
| 1 | 9 | 4 | 3 | 2 | 8 | 6 | 7 | 5 |
| 8 | 5 | 7 | 6 | 9 | 4 | 1 | 3 | 2 |
| 2 | 6 | 3 | 1 | 7 | 5 | 4 | 9 | 8 |
| 4 | 8 | 6 | 9 | 3 | 1 | 2 | 5 | 7 |
| 9 | 3 | 1 | 2 | 5 | 7 | 8 | 6 | 4 |
| 7 | 2 | 5 | 8 | 4 | 6 | 3 | 1 | 9 |

சுடோக்கு எண் 55

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | 7 | | 2 |
| | | | | 7 | 9 | | 5 | |
| 7 | | | 4 | 8 | | | | 1 |
| | | | | | 5 | | | 4 |
| | 5 | 9 | 1 | | 8 | 3 | 7 | |
| 6 | | | 9 | | | | | |
| 4 | | | | 2 | 7 | | | 9 |
| | 1 | | 8 | 9 | | | | |
| 9 | | 3 | | | 6 | | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# கிளிநொச்சியில் காணாமல் போனவர்கள் பற்றி மீண்டும் முறைப்பாட்டுப் பதிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் மீள் முறைப்பாட்டுப் பதிவு நடவடிக் கையில் கொழும்பில் இருந்து வருகைதந்த புலனாய்வுத்துறை யினர் ஈடுபட்டனர்.

வவுனியா புலனாய்வுத்துறை செயலகத்தில் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு களின் அடிப்படையில் இவ் மீள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. காணாமல் போனவர்களின் பெற் றோர், உறவினர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலே யே இந்த மீள் பதிவுகள் இடம் பெற்றன.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய வளாகத்தில் கடந்த இருதினங் களாக இவ் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது காணாமல்போன வர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத் திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி, புகைப்படம் முதலானவையும் கோரிப் பெறப் பட்டதாகவும் காணாமல் போன பிள்ளைகளின் பெற்றோர் தெரிவி த்தனர்.

கடந்த யுத்தத்தின்போது பெரு மளவு பிள்ளைகளும், பொதுமக களும் காணாமல் போனமை தொடர்பில் ஏற்கனவே பொலிஸ நிலையங்களிலும், மனித உரிமை அமைப்புக்களுடனும், அரசியல் கட்சிகள், அரசாங்கம் முதலான வற்றிற்கும் முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# காஞ்சியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிடுமாறு முதலமைச்சர் கோரிக்கை

போபால் சர்வதேச பௌத்த பல்கலைக்கழகத்திற்கான அடிக் கல்லை நாட்டுவதற்குச்சாஞ்சிக்கு வருகை தரவுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்தரா ஜபக் ஷவிற்கு எதிரான நடவடிக்கை களை கைவிடுமாறு மத்திய பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் கோரிக்கை விடுத் துள்ளார். மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோவுக்கு எழுதிய கடிதத் திலே இவ்வாறு கேட்டுள்ளார்.

"சாஞ்சியில் நடைபெறவிருக் கும் நிகழ்வு எந்த வகையிலும் அரசியல் சார்ந்ததல்ல.

ஆசிய நாடுகளுக்கி டையில் சமாதானத் தையும் சௌஜன்னி யத்தையும் ஏற்படுத்துவதற்கான ஒரு முயற் சியே இது" என்றும் அக்கடிதத் தில் அவர் குறிப்பிட டுள்ளார்.

"மனித உரிமை விவகாரங் களில் தமிழ் மக்களுக்கு சார் பாகவே தான் இருப்பதாகவும் பாரதிய ஜனதாக்கட்சித் தலை-வரான சிவ்ராஜ் குறிப்பிட்டுள்ளார். ஆசிய நாடுகளின் பல்வேறு பண்பாடுகளை ஒன்றிணைப்பதே மத்திய அரசின் நோக்கம் என்றும் அதற்காகவே பௌத்த பல்க லைக் கழகம் அமைக்கப்படுவ தாகவும் முதலமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

# வேள்வியைக் குழப்ப முயன்ற அமைச்சர் காளியின் கோபத்துக்கு ஆளானாராம்

## - முன்னேஸ்வரம் குருக்கள் கூறினார்

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வேள்வி நடவடிக் கைகளுக்கு எதிராகச் செயற்பட்ட அமைச்சர் ஒருவர் காளியம்மனின் கோபத்திற்கு இலக்கானார் என்று மேற்படி ஆலயக்குருக்களான சிவபாதசுந்தரம் கூறினார். சம்பந் தப்பட்ட அமைச்சருக்கு கஸ்டகாலம் வரவேண்டுமென்று காளியம்மன் சாபமிட்டுள்ளதாகவும் குருக்கள் கூறினார்.

இவ்வருடம் நடைபெறவிருந்த வேள்வி இனி நடைபெறாது. அடுத்தவருடம் வேள்வி வழமை போல் நடைபெறும்" என்றும் குருக்கள் கூறினார்.

"வேள்வியை நிறுத்தமுயன்ற அமைச்சருக்கு கஷ்டத்திற்குமேல் கஷ்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த அமைச்சரின் குடும்ப அங்கத்தவரொருவர் பார தூரமான நெருக்கடியினை எதிர் நோக்கியுள்ளார் இவையெல்லாம் காளியம்மனுக்கெதிராக செயற்பட் டதால் வந்த வினையாகும். இவ் வாறான பிரச்சினையை ஏற்படுத்த யவர்களுக்கு காளியம்மன் தண் டனை வழங்க வேண்டுமென்று கேட்டு நாம் வணங்குவது வழக் கம்" என்றும் குருக்கள் கூறினார்.

"இறைச்சிக்காகவே நாம் மிருக பலி செய்கின்றோம் என்று சிலர் நினைக்கிறார்கள். இந்துமதக் கிரிகையொன்றினையே நாம் மேற்கொள்ளுகிறோம். நூற்றுக் கணக்கான மிருகங்களை நாம் பலியிடுவதில்லை. வருடத்திற்கு ஒருதடவை மட்டுமே இந்த வேள் வியை நடாத்துகிறோம். அதுவும் பத்து நாட்களுக்கு இந்துசமய வழிபாட்டில் ஈடபட்டபின்னரே இந்த வேள்வியைச் செய்கிறோம். குறித்த தினத்தன்று வேள்வி யைச் செய்ய முடியாவிட்டால் இன்னொரு தினத்தில் அதனைச் செய்யமுடியாது" குருக்கள் கூறி னார்.

# மட்டு. சிறைச்சாலைக் கைதிகளின் சத்தியாக்கிரகம் நிறுத்தம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கூரை மீதேறி சத்தியாக்கிரகம் செய்த ஆறு தமிழ் கைதிகளின் பிரச்சினை, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ. கொடிப்பிலினால் சுமுகமாக தீர் த்து வைக்கப்பட்டது. இந்த ஆறு கைதிகளுமே தாவர உணவு உண்பவர்களான தங்களுக்கெ னச் சமைக்கப்படும் பருப்புக் கறியை, மாமிசம் உண்ணும் ஏனைய கைதிகளுக்கு வழங்கப் படுவதை ஆட்சேபித்தே இவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். மரக்கறி சாப்பிடுபவர்களுக்கு புறம்பாக உணவு வழங்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாய கம் உத்தரவிட்டதையடுத்து உண்ணா விரதம் கைவிடப்பட் டது.

# மானிப்பாயில் சில வீதிகள் ஒளிபெற்றுள்ளது

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பல பகுதிகள் மிக நீண்டகாலமாக இருள் சூழ்ந்த நிலையில் காணப்பட்டன. தற்பொழுது சில பகுதிகளுக்கு மின்சார சபையின் உதவியுடன் மானிப்பாய் பிரதேச சபையினரால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது.

இவ் செயற்பாடுகளை மக்கள் பெரிதும் பாராட்டியதுடன் தமது நன்றிகளையும் பிரதேச சபையி னருக்கு தெரிவித்துள்ளனர்" இதே போல் ஏனைய பகுதிகளிற்கும் விரைவில் மின் விளக்குகளைப் பொருத்தி உதவுமாறு கோரப் பட்டுள்ளது.

# கழுகுக் கண்கள்

பருவப் பெயர்ச்சி மழை காலம் ஆரம்பித்திருப் பதனால் இலங்கையில் மீண்டும் டெங்கு நோய் அபாயம் தோன்றியுள்ளது. சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் கொழும்பு மாநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் குறைந்திருந்த போதிலும், கடந்த ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசத்தை கழுகுக் கண்கள் சந்தித்த போது அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதத்திலேயே அதிகளவான டெங்கு நோயா ளிகள் பதிவு செய்யப்பட்டி ருந்தனர். கொழும்பு மாநகரில் செப்டம்பர் மாதத்தில் 31 டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டதாக தெரி வித்த அவர், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் டெங்கு நோய் கூடுதலாக பரவி மக்களுக்கு பெரும் ஆபத்தை உண்டாக்கு வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் டாக்டர் பிரதீப் காரி யவசம் எச்சரிக்கை செய்தார்.

எனவே, டெங்கு நோய் பெருமளவில் பரவி மக்களுக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்து வதை தடுக்க வேண்டுமாயின் இப்போதிருந்தே மக்களும், உள்ளூராட்சி மன்றங்களும், சுகாதார அமைச்சும் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுதல் அவசியம் என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் அமெரிக்கா, கிழக்கு மத்திய- தரைக் கடல் பிரதேசம், தென் கிழக்கு ஆசியா, பசுபிக் சமுத்திரத்தின் மேற்கு பிரதேசம், ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வருடா வருடம் டெங்கு நோய் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள் ளது. இந்த நாடுகளில் வருடா வருடம் 50 மில்லியன் டெங்கு நோயாளிகள் இந்நோயினால் உபாதைக்கு உட்படுகிறார்கள் என்றும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கு நோய் 60 ஆண்டுக ளுக்கு முன்னர் தான் கண்டு பிடிக் கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இந்நோய் 30 மடங்கு அதிக ரித்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வாளர் டாக்டர் மைக்கல் கிரபோட் அறிவித்துள்ளார். இலங்கை மட்டுமன்றி தாய்லாந் தும் டெங்கு நோயினால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. தாய்லாந்தில் இவ்வாண்டில் 17 ஆயிரத்து 86 டெங்கு நோயாளிகள் இனங்காணப் பட்டனர். இலங்கையில் செப்ட ம்பர் மாதம் வரையில் 29 ஆயிரத்து 762 டெங்கு நோயாளிகள் இனங்காணப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் கிறது.

டெங்கு நோயை பூண்டோடு ஒழித்துக்கட்டும் முகமாக சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை கடந்த காலத்தில் எடுத்திருந்த போதிலும் அவை எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. அதற்கென அமைச்சு கடந்த காலத்தில் கியூபாவில் இருந்தும் பீ.ரி.ஜ.பக்றீரியாவை இலங் கைக்கு கொண்டு வந்து டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு எடுத்த முயற்சியும் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. இதையடுத்து சுகாதார அமைச்சு 1230 மில்லியன் ரூபாவை செலவு செய்து கியூபாவில் தயாரிக்கப்பட்ட பீ.ரி.ஜ. பக்றீரியாவை தெளிக்கக் கூடிய வசதியுடைய கருவிகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை டெங்கு அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் ஒக்டோபர் மாத பிற்பகுதி முதல் பாரிய அளவில் தெளித்து டெங்கு நுளம்புகளை பூண்டோடு ஒழிக்கும் பணியையும் சுகாதார அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

சுமார் 9 மாதங்களுக்கு முன்னர் டெங்கு நோய் உச்சக்கட்டத்தில் இருந்த போது நம்நாட்டு மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாக டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் பணியை வார இறுதி நாட்களிலும், மற்றைய நாட்களிலும் சிரமதான செயற்பாடுகளின் மூலம் வெற்றிகரமாக மேற்கொண் டார்கள். அதன் காரணமாகவே டெங்கு நோய் இவ்வாண்டின் முற்பகுதியில் ஓரளவு குறைந்த தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ஆயினும் காலப்போக்கில் நம் மக்கள் தங்கள் பொறுப்புகளை மறந்து யோகட்கப்களை பொது இடங்களில் எறிந்து விடுவதனாலும், சிரட்டை மற்றும் இளநீர் குடித்து விட்டு இளநீர் கோம்பைகளை வீசிவிடுவத னாலும் அவற்றின் மூலம் இப்போது டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் அதிக வேகமாக இனவிருத்தி செய்து கொண்டிருக்கின்றன.


டெங்கு நோய் பரவுகின்ற வேகத்தைப் பார்த்தால் குறைந் தபட்சம் ஒரு குடும்பத்தில் ஒருவராவது டெங்கு நோயினால் பாதிக்கப்பட வேண்டிய ஆபத்தை எதிர்நோக்குவார்கள் என்று டெங்கு நோய் ஒழிப்பு பணி யில் ஈடுபட்டுள்ள சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனவே, டெங்கு நோயை கட்டுப்படுத்த வேண்டுமாயின் மக்கள் தங்கள் சமூகப் பொறுப்பை உணர்ந்து டெங்கு நோயை பூண்டோடு ஒழித்துக் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசிய மாகும். மக்கள் பொறுப்பற்ற மறையில் தாங்கள் வாழும் சுற்றாடலை அசுத்தமாக வைத்திருந்தால் டெங்கு நோய் அவர்கள் வாழும் பிரதேசத்தில் பல மடங்குகளில் அதிகரிப்பது திண்ணம்.ஒரு சதுர கிலோமீற்றர் தூரத்தில் பீ.ரி.ஜ. பக்றீரியா நுளம்பு கொல்லியை தெளிப் பதற்கு 35 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை செலவா கும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது. இவ்வாண்டில் 4 மில்லியன் ரூபா பெறுமதியான 10 ஆயிரம் லீற்றர் பீ.ரி.ஜ. பக்றீரியாவை அரசாங்கம் கியுபாவில் இருந்து இறக்குமதி செய்தது. ஆயினும் இதில் பெரும்பகுதி கிருமிநாசனிகள் பயன்படுத் தப்படாமல் களஞ்சியசாலைக-ளில் முடங்கிக் கிடப்பதாக இப்போது அறிவிக் கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு இப்பணியை தனியாக நிறை வேற்றுவதில் பிரச்சினை கள் இருந்த காரணத்தினால் தான் இந்நிலை ஏற்பட்டிருப் பதாக அறிவிக்கப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது இதனை ஒரு தேசியப் பிரச்சினையாக கருதி சகல அரசாங்க திணைக்களங் களும், உள்ளூராட்சி மன்றங்க ளும், சமூக அமைப்புகளும், பொது மக்களும் ஒன்றிணை ந்து ஓரணியாக டெங்கு ஒழிப்பு பணியை மேற்கொண்டால் நிச்சயம் சாதகமான பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை கழுகுக் கண்களுக்கு என்றென்றும் இருந்து வருகின்றது.

# உலக பார்வை

# செவ்வாய் கிரகத்தில் சூரிய கிரகணம்: படம் பிடித்து அனுப்பியது கியூரியாசிட்டி



செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கும் கியூரியா சிடி ரோவர் விண்கலம், அங்கு காணப்பட்ட சூரிய கிரகணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளது.

செவ்வாய் கிரகத்தை பற்றி ஆராய அமெரிக்காவின் கியூரியா சிடி ரோவர் விண்கலம், கடந்தாண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

பத்து மாத பயணத்துக்கு பின், 56 கோடியே 30 லட்சம் கிலோ மீற்றர் தூரம் பயணித்து கடந்த ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி செவ்வாயில் தரையிறங்கியது.

பிரமாண்ட விண் கற்களால் ஏற்பட்ட காலே பள்ளப் பகுதியில், பல்வேறு சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையே இந்த ரோவர் செவ்வாய் கிரகத்தில் 13ஆம் திகதி காணப்பட்ட சூரிய கிரகணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளது. தற்போது நாசா மையம் இந்த படத்தை வெளியிட்டுள்ளது.




அமெரிக்க அதிபர் ஒபாமா, ஷில்லர் பார்க்கில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட போது அவரது ஆதரவாளர்களை பார்த்து கையசைத்தார்.

# சிரிய போர்க் குற்றவாளிகளின் ரகசிய பட்டியலை தயாரித்தது ஐ.நா

சிரியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல் குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகள் தொடர்பாக தனி நபர் மற்றும் குழுக்கள் அடங்கிய ரகசியப் பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளதாக ஐ.நா அறிவித்துள்ளது.

ஐ.நா.வின் முண்ணனி புலனாய்வு அதிகாரி பௌலோ சேர்ஜியோ பின்ஹெயிரோ இது பற்றிக் கூறுகையில், ஐ.நா அதிகாரிகளிடம் உறுதியான மற்றும் அசாதாரணமான சான்று கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் ஐ.நா.வின் பாதுகாப்புப் பிரிவு சர்வதேச குற்றவாளிகளுக்கான நீதிமன்றத்தில் (International Criminal Court - ICC) சிரியாவின் தற்போதைய நிலைமை குறித்து வாதிட வேண்டும் என கோரியுள்ளார்.

இதேவேளை சிரியாவில் தங்கியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக் கூறுகையில், சிரியாவில் ஆயுதம் தாங்கிய போராட்டக்காரர்கள் தம்மிடம் அகப்பட்டுள்ள கைதிகளை சித்திரவதை செய்து வருவதாகவும், சிலருக்கு மரண தண்டனை கூட விதிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இருப்பினும் அரசின் ஆதரவு படைகள் மேற்கொள்ளும் போர் நிறுத்த மீறல்களே மிக அதிகளவில் பரவியிருப்பதாகவும் இவர் கூறியுள்ளார்.

# 21,000 ஆடுகளுக்கு தொற்று நோய்: விஷம் வைத்து அழிப்பு



அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 21 ஆயிரம் ஆடுகளுக்கு தொற்று நோய் ஏற்பட்டதால், அவற்றை பாகிஸ்தான் அதிகாரிகள் விஷம் வைத்து கொன்று வருகின்றனர்.

பக்ரீத் பண்டிகை நெருங்கும் நிலையில் அவுஸ்திரேலியாவில் இருந்து பக்ரைனுக்கு, 21 ஆயிரம் ஆடுகள் இரு வாரங்களுக்கு முன் கப்பலில் அனுப்பப்பட்டன.

தனியார் நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட இந்த ஆடுகளுக்கு தொற்று நோய் உள்ளதாகக் கூறி, ஆடுகளை பெற பக்ரைன் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதையடுத்து இந்த ஆடுகள் கடந்த 5ஆம் திகதி உள்ளூர் இறக்குமதியாளர் மூலம் கராச்சி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

சிந்து மாகாண அரசு அதிகாரிகள் ஆடுகளை இறக்குமதி செய்ய அனுமதித்தனர். ஆனால் சிந்து மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்து, ஆடுகளை சோதித்த போது சால்மோனெல்லா மற்றும் ஆக்டினோமைசஸ் என்ற தொற்று கிருமிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

உணவுக்கு லாயக்கற்ற இந்த ஆடுகளை சாப்பிட்டால் உடல் நலக் கேடு ஏற்படும் என்றும் அதிகாரிகள் எச்சரித்தனர்.


இதையடுத்து 21 ஆயிரம் ஆடுகளையும், மீண்டும் ஒரு முறை சோதனைக்கு உட்படுத்தி தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட பின் அவற்றை விஷமிட்டு கொன்று விடுமாறு, கராச்சி சுகாதார கமிஷனர் ரோஷன் அலி ஷேக் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து இந்த ஆடுகள் கொல்லப்பட்டு வருகின்றன. இவ்விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய தூதர் பீட்டர் ஹேவர்ட்டிடம் பாகிஸ்தான் அரசு சார்பில் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

கராச்சி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட போது ஆடுகள் ஆரோக்கியமாக இருந்ததாகவும், துறைமுக அதிகாரிகள் ஒப்புதல் அளித்த போது எவ்வித நோய் தொற்றும் காணப்படவில்லை என்றும் ஹேவர்ட் சுட்டிக் காட்டி உள்ளார்.

# போலியோ சொட்டு மருந்து கொடுக்க தலிபான்கள் அனுமதிக்க வேண்டும்

## -அமைச்சர் வேண்டுகோள்



பாகிஸ்தானில் பழங்குடி பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து அளிக்க தலிபான்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று சவுதி அரேபியாவின் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ஹுசேன் கெஸய்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தான் மற்றும் தெற்கு வஜிரிஸ்தான் பகுதிகளில் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கின்றனர்.

இப்பகுதிகளில்தான் தலிபான்கள் அதிகம் வசிக்கின்றனர். எனவே இப்பகுதிகளில் போலியோ சொட்டு மருந்து அளிப்பதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

அமெரிக்க ஆளில்லா விமான தாக்குதல் நிறுத்தப்படும்வரை போலியோ சொட்டு மருந்து அளிக்க அனுமதிக்கப் போவதில்லை என்று தலிபான்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க தாக்குதலில் அப்பாவி பெண்களும், குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஜூன் மாதத்தில் இவ்விரு பகுதிகளிலும் போலியோ சொட்டு மருந்து அளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதற்காக பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகருக்கு பயணம் மேற்கொண்ட அவர் தலிபான்களுக்கு தனது கோரிக்கையை வேண்டுகோளாக வைத்துள்ளார்.

பழங்குடியினப் பகுதியில் உள்ள குழந்தைகள் போலியோ நோய் தாக்குதலுக்கு ஆளாவதைத் தடுக்க உதவுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பெஷாவரில் செய்தியாளர்களிடம் பேசிய கெஸய்ரி, தலிபான்கள் விடுத்துள்ள இத்தகைய அறிவிப்பு பாகிஸ்தானுக்கு மட்டுமின்றி பிற நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக தான் கருதுவதாகக் குறிப்பிட்டார்.

தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் தலைவர்களான மௌலவி நசீல், மங்கள்பாக், மற்றும் மூத்த தலைவர்கள் தனது கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சவுதி அரேபியாவில் போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

போலியோ நோய் உண்டாக்கும் வைரஸ் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு குறிப்பிட்ட இடைவெளியில் தடுப்பு மருந்து கொடுப்பதன் மூலம்தான் அதை முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்றார்.

உலக நாடுகளில் வைரஸ் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ள நாடுகள் வரிசையில் பாகிஸ்தானும் உள்ளது. குறிப்பாக இளம்பிள்ளை வாதம் எனப்படும் போலியோ நோய் தாக்குதலுக்கு ஆளாவோர் எண்ணிக்கை அதிகம் உள்ளது.

ஹஜ் பயணத்துக்காக சவுதி அரேபியாவுக்கு வரும் பாகிஸ்தான் பிரஜைகளுக்கு கட்டாயம் தடுப்பு மருந்துகள் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) இயக்குநர் ஜெனரலின் ஆலோசகராக கெஸய்ரி உள்ளார்.

## அமெரிக்க திரைப்படத்திற்கு எதிர்ப்பு:

# காபூலில் வெளிநாட்டவர் மீது தற்கொலைப்படை தாக்குதல்



ஆப்கானிஸ்தானில் வெடிகுண்டு தாக்குதல், தற்கொலைப்படை தாக்குதல் தினசரி நிகழ்ச்சிகளாகி விட்டன.

தினசரி தலிபான்கள் மற்றும் பிற அமைப்பு பயங்கரவாதிகள் நடத்தும் இந்த தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்காவால் வெளியிடப்பட்ட innocence of muslims என்ற படத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக Hezb-e-Islami என்ற அமைப்பு நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 12 பேர் பலியாயினர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல், வெளிநாட்டவர்கள் சிலருடன் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்து.


அப்போது இந்த பேருந்து மீது பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தியதில் 12 பேர் பலியாயினர். 8 பேர் காயமடைந்தனர்.

பலியானவர்கள் காபூல் சர்வதேச விமான நிலையத்தினை நோக்கி சென்ற போது தாக்குதல் நடந்துள்ளது தெரியவந்துள்ளது.

# ராகுல் சர்வதேச தலைவர், இத்தாலியில் கூட போட்டியிடலாம்: மோடி விமர்சனம்

# இந்திய செய்திகள்

ராகுல் காந்தி தேசியத் தலைவர் மட்டுமல்ல, சர்வதேசத் தலைவரும் கூட..அவர் இந்தியாவில் மட்டுமல்ல, இத்தாலியிலும் கூட தேர்தலில் போட்டியிடலாம் என்று கடுமையாக சாடியிருக்கிறார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.



குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி ராஜ்கோட்டில் நடைபெற்ற விவேகானந்த யுவ பரிஷத் மாநாட்டில் பேசியதாவது, 21-ம் ஆண்டு நூற்றாண்டு இந்தியாவின் நூற்றாண்டு என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சுவாமி விவேகானந்தரின் எதிர்பார்ப்புகளை பொய்யாக்கிவிட்டனர். இந்த நாட்டின் 60 கோடி மக்கள் 48 மணி நேரம் முழு இருட்டில் சிக்கித் தவிக்கின்றனர்.

மருத்துவமனைகள் மின்சாரமின்றி மூடப்பட்டன. அப்படியானால் உலக வரைபடத்தில் இந்தியாவுக்கு என்ன இடம் இருக்கிறது? இந்தியாவே இருளில் மூழ்கிய போது குஜராத் மாநிலம் மட்டும் தான் மின்சாரத்தில் ஒளிர்ந்தது!

காங்கிரஸ் தலைவர் சிலர் என்னை விமர்சித்து அறிக்கை வெளியிட்டிருந்தனர். மோடியைப் பொறுத்தவரையில் குஜராத் மாநிலத்துக்கு மட்டுமேயான தலைவர்.


ஆனால் ராகுல் காந்தியோ தேசியத் தலைவர் என்று கூறியிருந்தனர். உண்மைதான்.

நான் குஜராத்துக்கான ஒரு தலைவராக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன். உங்களது ராகுல் காந்தி தேசியத் தலைவர் மட்டுமல்ல..ஏன் அவர் சர்வதேசத் தலைவரும் கூடத்தான். அவர் இந்தியாவில் மட்டுமல்ல.. இத்தாலி நாட்டுத் தேர்தலிலும் கூட போட்டியிட்டு வெற்றி பெறலாம். மத்திய அரசின் சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டுக்கு அனுமதி என்பது நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்தை பாழடித்துவிடும் என்பதால் கடுமையாக எதிர்க்கிறோம். உற்பத்தித் துறையில் கடுமை யாக விளைவுகளை ஏற்படுத்தும். வேலையின்மையைத்தான் உருவாக்கும். 8 ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரதமர் மன்மோகனை சிங்கம் என்கின்றனர்.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் கையெழுத்திட்ட போது சிங்கம் என்றழைக்கப்பட்டார். இப்போது அதே அமெரிக்காவின் நிர்பந்தத்தை ஏற்று சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டுக்கு அனுமதி கொடுத்த போதும் சிங்கம் என்று அழைக்கப்பட்டிருக்கிறார் என்றார்அவர்.

இந்த நிகழ்ச்சியில், ஒலிம்பிக்கில் பதக்கம் பெற்றுத் தந்த ககன் நரங், கிரிக்கெட் வீரர்கள் ரவீந்திர ஜடேஜா, புஜரா ஆகியோர் மோடியால் சிறப்பிக்கப்பட்டனர்.

## அன்னா குழுவினர் அரசியல் கட்சி தொடங்க 76 சதவீத மக்கள் ஆதரவு



அன்னா ஹசாரேவின் ஊழலுக்கு எதிரான இந்தியா இயக்கம் சார்பாக அரசியல் கட்சி தொடங்க 76 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

அன்னா ஹசாரே உண்ணாவிரதத்தைக் கைவிட்டு, தமது இயக்கத்தைக் கலைப்பதாக அறிவித்துவிட்டு ஒகஸ்ட் 6ம் திகதி சொந்த கிராமத்துக்குத் திரும்பினார்.

தாம் அரசியல் கட்சி தொடங்கவோ, தேர்தலில் போட்டியிடவோ உத்தேசிக்கவில்லை எனவும் அவர் அறிவித்தார்.

இந்நிலையில் அரவிந்த் கேஜ்ரிவால் கூறியதாவது: 7.37 லட்சம் பேரிடம் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவில் 5.61 லட்சம் பேர், அதாவது சுமார் 76 சதவீதம் பேர், ஊழலுக்கு எதிரான இயக்கத்தினர் சார்பாகப் புதிய அரசியல் கட்சி தொடங்குவதற்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.

ஊழலுக்கெதிரான இயக்கம் பற்றி ஆலோசனை நடத்த ஹசாரே புது டெல்லிக்கு நாளை வரவிருக்கும் நிலையில், இந்த கருத்துக் கணிப்பு விவரங்களை அவர் முன்பு அளிப்பேன் என கேஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ ரகசியங்களை பாகிஸ்தானுக்கு வெளியிட்ட ஐ.எஸ்.ஐ உளவாளி கைது

இந்தியாவின் இராணுவ ரகசியங்களை பாகிஸ்தானுக்கு தெரிவித்து வந்த ஐ.எஸ்.ஐ உளவாளி ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியாவின் விசாகப்பட்டின கடற்படைத் தளம், ஊட்டி இராணுவ முகாம் உள்ளிட்ட பல்வேறு இடங்களின் ரகசியங்கள் பாகிஸ்தானுக்கு தகவல்களாக பரிமாறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம் என்ற ஊரைச் சேர்ந்த தமீம் அன்சாரி (35) என்பவரை இது தொடர்பாக பொலிஸார் கைது செய்தனர்.

இவர் சில வருடங்களாக இலங்கைக்கு காய்கறிகளை அனுப்பி வைக்கும் தொழில் செய்து வந்தார். இதற்காக தமீம் அன்சாரி வாரத்திற்கு ஒரு முறை திருச்சி விமான நிலையம் வழியாக கொழும்பு சென்று வந்தார்.

இதற்கிடையில் காய்கறி வாங்குவதாக கூறி விசாகப்பட்டினம் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களுக்கு அவர் அடிக்கடி சென்று வந்தார். சமீப காலமாக அன்சாரியிடம் அதிக அளவில் பணப் புழக்கம் ஏற்பட்டது.

இது தொடர்பாக நண்பர்கள் கேட்டதற்கு காய்கறி ஏற்றுமதி தொழிலில் அதிக அளவு லாபம் கிடைப்பதாக அவர் பதிலளித்தார்.

இருப்பினும் அவரது நடவடிக்கை அந்த பகுதியை சேர்ந்தவர்களிடம் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக அவர்கள் க்யூ பிரிவு பொலிஸாருக்கு ரகசியமாக தகவல் தெரிவித்தனர்.

இந்த தகவலின் அடிப்படையில் கடந்த ஒரு மாத காலமாக க்யூ பிரிவு டிஎஸ்பி ராஜேந்திரன் மற்றும் பொலிஸார் அன்சாரியை கண்காணித்து வந்தனர்.

காய்கறி வாங்குவதாக கூறி அன்சாரி விசாகப்பட்டினம் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களுக்கு சென்று வந்ததும், அங்கு சில இளைஞர்களை அவர் சந்தித்தது பேசுவதும் தெரியவந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அதிராம்பட்டினத்தில் இருந்து ஊட்டிக்கு காரில் புறப்பட்ட அன்சாரியை வழிமறித்து க்யூ பிரிவு பொலிஸார் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையின் போது அவரிடம் இருந்து ஏராளமான குறுந்தகடுகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றை சோதனை செய்து பார்த்த போது, அதில் விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படைத் தளம் மற்றும் அமைப்பு, அங்கு நிறுத்தப்பட்டுள்ள போர் கப்பல்கள் பற்றிய விவரம், ஊட்டியில் உள்ள இராணுவ முகாமின் அமைப்பு மற்றும் அவற்றில் நடைபெறும் பணிகள் பற்றிய விவரங்கள் இருந்தன.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த க்யூ பிரிவு பொலிஸார் அன்சாரியை ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் கடந்த சில வருடங்களாக இலங்கையில் உள்ள ஐஎஸ்ஐ அதிகாரி ஒருவருடன் தமீம் அன்சாரி நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது தெரியவந்தது.

அந்த ஐஎஸ்ஐ அதிகாரியின் உளவாளியாக அன்சாரி செயற்பட்டு வந்துள்ளார். இங்கிருந்து இந்திய இராணுவ ரகசியங்களை ஐஎஸ்ஐ அதிகாரிகளுக்கு கொடுத்து வந்துள்ளார்.

இதற்காக அவர் இலட்சகணக்கில் பணம் பெற்று வந்ததும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அன்சாரியை கைது செய்த க்யூ பிரிவு பொலிஸார், நேற்று மாலை திருச்சி ஜேஎம்,2 கோர்ட் மாஜிஸ்திரேட் ராஜேந்திரன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அவரை 15 நாள் காவலில் திருச்சி மத்திய சிறையில் அடைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஐஎஸ்ஐ உளவாளியாக கைது செய்யப்பட்டுள்ளது இதுவே முதன் முறையாகும்.



குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தன் 63வது பிறந்த நாளை முன்னிட்டு, காந்தி நகரில், தன் தாயாரிடம், ஆசீர்வாதம் பெற்றார்.

## திருச்சியில் பள்ளி வாகனத்திலிருந்து விழுந்து ஐந்து வயது சிறுவன் பரிதாபமாக பலி!



திருச்சியில் பள்ளி வாகனத்திலிருந்து கிஷோர் என்ற 5 வயது மாணவன் தவறி விழுந்து பலியான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிஷோர் திருச்சி துறையூரில் இருக்கும் விக்னேஷ் வித்யாலயா பள்ளியில் யு.கே.ஜி., படித்து வந்தான்.

நேற்று காலையில் வழக்கம் போல் பள்ளி வாகனத்தில் ஏறியிருக்கிறான். கிளீனர் அமரும் இடத்தில் கிோர் அமர்ந்து பயணித்தான்.

அப்போது அருகே இருந்த கதவு சரியாக மூடப்படாமல் திறந்ததை அடுத்து மாணவன் கிஷோர் தவறி விழுந்தான்.

ஓடும் வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததில் மாணவன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட மாணவனை பரிசோதித்த மருத்துவர்கள் மாணவன் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதனால் மருத்துவமனை மற்றும் பள்ளியை சுற்றி பெற்றோர்கள், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தொடரும் அவலம்: கடந்த யூ 25ம் திகதியன்று தாம்பரத்தில் உள்ள சீயோன் பள்ளி பேருந்தில் பயணம் செய்த 2ம் வகுப்பு மாணவி ஸ்ருதி, பேருந்துக்குள் இருக்கைக்கு அடியில்

ஓட்டை வழியாக கீழே விழுந்து உயிரிழந்தார். இந்த சம்பவத்திற்குப் பின்னர் தமிழக அரசு பள்ளி பேருந்துகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகளை சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

அதிக கெடுபிடிகள் கொண்ட புதிய விதிமுறைகள் அமலுக்கு வந்துவிட்ட நிலையிலும் மீண்டும் விபத்து நடந்திருப்பது தமிழ்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## முலாயம் பிரதமராவதற்கு வரவேற்பு: முன்னாள் பிரதமர் தேவ கௌடா


மத்திய அமைச்சரவையில் 3வது அணி அமைத்து, ஆட்சியைப் பிடித்து முலாயம் சிங் பிரதமரானால் வரவேற்பேன் என்று முன்னாள் பிரதமர் தேவ கௌடா தெரிவித்தார்.

இந்திய அரசியலை பொறுத்தவரை காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி ஆகியன மத்திய அமைச்சரவையல் ஆட்சி புரிந்ததை மக்கள் பார்த்துள்ளனர்.

ஆனால் 3வது அணிக்கு முலாயம் சிங் தலைமை ஏற்க வேண்டும் என்பதே தன் விருப்பமென தேவ கௌடா கூறியுள்ளார்.

இப்போது பாஜக, காங்கிரஸ் கட்சிகளின் மீது வாக்காளர்கள் அதிருப்தியில் உள்ளனர். எனவே, 3வது அணியின் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

3வது அணிக்கு முலாயம் சிங் தலைமை ஏற்று, பிரதமர் வேட்பாளரானால் அவருக்கு எங்களது முழு ஆதரவையும் தர விரும்புகிறேன் என்றும் தேவ கௌடா உறுதியளித்தார்.



# இணுவில் இந்துவின் வெற்றிக்கிண்ணம்: அருள் விளையாட்டுக்கழகம் சம்பியன்

வலிகாமம்

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் 7வது நிறைவையொட்டி நடத்திய 17 வயதுப் பிரிவினாக ளுக்க இடையே நடத்திய மென் பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டத் தில் இணுவில் இந்து விளையாட் டுக் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் அருள் விளையாட்டுக்கழக அணி யும் எவரேஸ்ற் விளையாட்டக் கழக அணியும் மோதிக் கொண் டன.


முதலில துடுப்பெடுத்தாடிய அருள் விளையாட்டுக்கழகம் 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் டுக்களை இழந்து 66 ஓட்டங் களை பெற்றது.

சர்மில் 10 நிலுஜன் 17 விதுரன்18 ஓட்டங்டகளை பெற் றார்கள்.

எவரெஸ்ற் விளையாட்டுக்கழ கத்தைச் சேர்ந்த எஸ்.தர்சன், கதீசன், கே.தர்சன் முறையே 6,15, 18 ஓட்டங்களைக் கொடுத்த தலா ஒரு விக்கெட்டைக் கைப் பற்றினார்கள்.

67 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய எவரெஸ்ட் விளை யாட்டுக்கழகம் 4.2 ஓவாகளில் அனைத்து விக்கெட்டக்களையும் இழந்து 39 ஓட்டங்களை பெற் றது.

அருள் விளையாட்டுக் கழகத் தைச் சோந்த விதுரன் 2 ஓவா கள் பந்து வீசி 12 ஓட்டங்க ளுக்கு 3 விக்கெட்டுக்களையும்



சர்மில் 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார் கள்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அருள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த விதுரன் தெரிவு செய்யப் பட்டார். சம்பியன் கிண்ணத்தை வேல ணை பிரதேச செயலக கணக் காளர் ப.கஜேந்திரன் வழங்கி கௌரவித்தார்.

# தடைக்கு எதிராக வழக்கு தொடர்கிறார் - பூபதி

இந்திய ரென்னிஸ் சங்கம் விதித்துள்ள தடையை எதிர்த்து வழக்குத் தொடர ரென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி முடிவு செய்துள் ளதாகத் தெரிகிறது.

மகேஷ் பூபதி, ரோஹன் போப ண்ணா ஆகியோர் 2014 ஜூன் வரை இந்திய அணிக்கு தேர்வு செய்யப்பட மாட்டார்கள் என்று அகில இந்திய டென்னிஸ் சங்கம் (ஏஐரிஏ) தெரிவித்தது.

ரென்னிஸ் சங்கம் வலியுறுத் திய நிலையிலும் ஒலிம்பிக் போட் டியில் லியாண்டர் பயஸுடன் சேர்ந்து விளையாட மாட்டோம் என்று இவர்கள் இருவரும் மறுத் ததே இந்த தடைக்குக் காரணம்.

இந்நிலையில் மும்பையில் திங்கட்கிழமை செய்தியாளர்க ளிடம் பேசிய பூபதி இது தொடர்பாகக் கூறியது: இந்தியா வுக்காக போபண்ணா 10 ஆண்டு கள் வரை ரென்னிஸ் விளையாடி யுள்ளார். நான் 18 ஆண்டுகளாக நாட்டுக்காக போட்டிகளில் பங்கே ற்று வருகிறேன்.

இந்நிலையில் எங்களுக்கு எதி ராக மிகக்கடுமையாக ரென்னிஸ் சங்கம் நடந்து கொண்டுள்ளது. இது ஏற்புடையதே அல்ல.



எனவே இது தொடர்பாக எனது தரப்பில் என்ன நடவடிக்கை எடுப பது என்பது குறித்து, முக்கிய மாக சட்டரீதியாக இந்த விடயத் தை அணுகுவது குறித்து தீவிர மாக ஆலோசித்து வருகிறேன்.

விரைவில் இது தொடர்பாக முடிவை அறிவிப்பேன் என்றார்.

உங்கள் மீதான நடவடிக்கை, ரென்னிஸ் சங்கத்தின் பழி வாங் கும் போக்கு என்று நினைக்கி றீர்களா? என்ற கேள்விக்கு, "ஆம் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றார் பூபதி.

# எனது ':.போர்ம்' குறித்து கவலையடைகிறேன்

- அப்ரிடி

கடந்த சில வாரங்களாக தனது ".'.போர்ம்" குறித்து சிறிது கவலை காணப்படுவதாக பாகிஸ் தான் அணியின் சகலதுறை வீரர் ஷகிட் அப்ரிடி தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கெதிரான நேற்று முன்தினம் நடந்த பயிற்சிப் போட்டியிலும் சிறப்பான பெறுபேற் றை அவர் வெளிப்படுத்தியிருக் காத நிலையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் 4 ஓவர்களில் 41 ஓட்டங்களை விட்டுக்கொடுத் திருந்த ஷகிட் அப்ரிடி, துடுப்பெ டுத் தாடும்போது ஓட்டமெதனை யும் பெறாது ஆட்டமிழந்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய போட் டியின் திறமை வெளிப்பாடுகள் குறித்து ஏமாற்றமடைந்துள்ள தாகத் தெரிவித்த ஷகிட் அப்ரிடி, கடந்த சில வாரங்கள் தனக்கு மோசமான வாரங்களாக அமைந் துள்ளதாகத் தெரிவித்தார். எனி னும் உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடரில் தன்னால் மிகச்சிறப் பாகச் செயற்பட முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த சில வாரங்களாக அப் ரிடி அவ்வளவு சிறப்பான திறமை வெளிப்பாடுகளை மேற்கொண் டிருக்காத நிலையில் அணியில் அவரது இடம் தொடர்பான கேள்வியும் எழுந்திருந்தது. எனி னும் கருத்துத் தெரிவித்த அப்ரிடி, அனைத்து சிரேஷ்ட வீரர் களும் இவ்வாறான மோசமான ".'.போர்மி"ல் மாட்டிக் கொள்வதா கவும், அதேபோலேயே தானும் மோசமான ".'.போர்மி"ல் காணப் படுவதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான சோதனைக்கா லங்கள் அனைவருக்கும் ஏற்படுவ தாகத் தெரிவித்த ஷகிட் அப்ரிடி, சில மிகப்பெரிய வீரர்கள் தாங்கள் சிறப்பாகச் செயற்படாத போது அழுதிருந்ததையும் தான் கண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தனது ".'.போர்ம்" குறித்துத் தான் கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்த ஷகிட் அப்ரிடி, எனி



னும் தன்னால் மீள்வருகை யொன்றைப் புரிய முடியும் எனவும் தெரிவித்தார்.

உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடரில் தன்னால் முக்கியமான பங்கை வகிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேச ரென்னிஸ் தரவரிசை பெடரர், அசுஷிரங்கா முதலிடத்தில்

சர்வதேச ரென்னிஸ் சம்மேள னத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய ரென்னிஸ் தரப்படுத்தலில் ஆண்கள் பிரிவில் சுவிற்சர்லாந் தின் ரொஜர் பெடரர், பெண்கள் பிரிவில் பெலாரசின் விக்டோரியா அஷரெங்கா தொடர்ந்தும் முதலி டத்தில் காணப்படுகிறனர்.

ஆண்கள் பிரிவில் நொவக் ஜொக்கோவிச் இரண்டாமிடத் திலும், அன்டி முர்ரே மூன்றாம-டத்திலும், ரபேல் நடால் நான் காமிடத்திலும் காணப்படுகின் றனர்.

பெண்கள் பிரிவில் அண்மை யில் ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்ட ஐக்கிய அமெரிக் காவின் செரினா வில்லியம்ஸ் தொடர்ந்தும் 4ஆம் இடத்திலேயே காணப்படுகிறார்.

<u>வெளியிடப்பட்டுள்ள தரப்படுத் தல் முடிவுகள்:</u>

**ஆண்கள்:**

ரோஜர் பெடரர், நொவக்



ஜெகோவிச், அன்டி முர்ரே, ரபேல் நடால், டேவிட் பெரர், தொமஸ் பேர்டிச், ஜோ வில்பிரட் சொங்கா, ஜுவன் மார்ட்டின் டெல் பொட் ரோ, ஜங்கோ ரிப்சரவிக், ஜோக் இஸ்னர்.

**பெண்கள்:**


விக்டோரியா அஷரெங்கா, மரியா ஷெரபோவா, அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா, செரியா வில்லி யம்ஸ், பெட்ரா குவிற்றோவா, அன்ஜெலிக் கேர்பர், சாரா எரானி, லீ நா, சமந்தா சொற்சொர், மரியன் பார்ட்டோரி.

# சச்சினை ஓய்வு பெற வற்புறுத்த கூடாது –லாரா

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டி லிருந்து ஓய்வு பெற வேண்டும் என்று பலரும் கருத்து தெரிவி த்து வருகின்றனர். இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் முன்னணி வீரர்களில் ஒருவரான பிரைன் லாரா, டெண்டுல்கருக்கு ஆதரவாக குரல் எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி. விருது வழங்கும் விழாவில் லாரா கூறுகையில், டெண்டுல்கர் இந்திய கிரிக்கெட்டுக்கு மட்டுமின்றி, சர்வ தேச கிரிக்கெட் உலகிற்கும் சொத்து போன்றவர்.

ஓய்வுபெற வேண்டிய சரியான நேரம் எது என்பது அவருக்கு தெரியும் என்று நான் நம்புகிறேன்.







தேசிய மட்டத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட அணி வீரர்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) கல்லூரியின் பழைய மாணவர்களினால் அளிக்கப்பட்ட கௌரவிப்பின்போது வலயக்கல்விப் பணிப்பாளரினால் கேடயம் வழங்கப்படுவதையும் விருந்தினர்களுடன், அணிவீரர்களையும் படத்தில் காணலாம். (அளவெட்டி)

# 160 எடுத்தால் வெற்றிதான்

- சனத்

இலங்கையின் முன்னாள் அதி ரடி வீரர் ஜெயசூர்யா கூறுகை யில், இம்முறை ஆசிய அணிக-ளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகளில் ஒன்றுதான் பட்டம் வெல்ல வாய் ப்புள்ளது. எந்த அணியாக இருந் தாலும் 160 ஓட்டங்களை எடுத் தால் நிச்சயம் நெருக்கடி கொடுக் கலாம். துணை கண்டங்களில் உள்ள ஆடுகளங்களில் 160 ஓட்டங்களுக்கு மேல் உள்ள இலக்கை எட்டுவதற்கு போராட வேண்டும் என்றார்.

இப்பத்திரிகை இன்.'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 19.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது